உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 34 | இராக்ஷச – சித்திரை – 10—5—75 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிங் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## தருமையில் குருவழிபாடு

### உலகியற் கல்வி :

‘இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்’ என்ற நாவலர் வாக்கு நம் சிந்தனைக்குரிய ஒன்றாக உள்ளது. ஆனால் உலகியற் கல்வி எல்லாம் உடலை வளர்ப்பதாக இருக்கின்றதே தவிர உயிரை உய்தி பெறுதற்கு உதவுவதாக இல்லை. தொடக்கக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி ஈறாக எல்லாம் வயிற்றுப்பிழைப்பிற்கு வழி வகுப்பனவாகவே அமைந்துள்ளன. உயிர்க்கு நலம் பயக்கும் மெய்யறிவு விளக்கம் இக்கல்வியிற் பெறவியலாது. ஆதலால் அருட்சான்றோர் பனுவல்களைக் கற்றுச் சிந்தித்துத் தெளிதலே உயிர்க்கு உறுதி பயக்கும் கல்வி எனலாம்.

### உயிரும் உடம்பும் :

உயிர் நிலைபெறவேண்டுமானால் உடம்புவேண்டும். உயிரின் இயக்கமே உடம்பைக்கொண்டுதான். ஆகவேதான் உடம்பை

ஓம்பிப் பாதுகாக்கவேண்டியது அவசியமாகிறது. திருமூலதேவ நாயனர் உடல் ஓம்பலின் இன்றியமையாமையை மிக அழகிய திருமந்திரப் பாட்டொன்றில் விளக்குகின்ருர்.

> " உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
> திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவும் மாட்டார்
> உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
> உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே "

## இறைவன் உதவி :

உடலை ஓம்பும்போதுதான் இறைவன் ஆன்மாக்களுக்குச் செய்துள்ள உபகாரம் இனிது புலப்படுகின்றது. உயிர் இருந்து வாழ்தற்கான உடலைச் சிவஞான போதத்தில் மெய்கண்டார் ' மாயா விந்திர தனு ' என்றே குறிப்பிடுகின்ருர். தனு, கரணம், புவனம், போகம் ஆகிய நான்கு வகையில் இறைவனின் அருள் உபகாரம் அமைந்துள்ளது. தனு உடலைக் குறிப்பது ; கரணங்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரங்களாகிய கருவிகள்; புவனம் உலகம் ; போகம் இன்பத்துன்ப அனுபவங்கள் இரண்டையுமே குறிக்கும். மற்றுமொரு திருமந்திரப்பாட்டு உடம்பின் அருமைப்பாட்டை வேறுவகையாக இனிது விளக்குகின்றது ;

> " உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
> உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
> உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
> உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. "

## உத்தமன் கோயில் :

உடம்பு உத்தமனுகிய இறைவன் வாழும் திருக்கோயிலாக உள்ளது; ஆதலின் இதனை நன்கு பரிசுத்தமாக இருக்கும்படிப் பேணிவரவேண்டும். ' உடம்பினுள் உத்தமனைக் காண் ' என்பது சான்ருேர் கண்ட நெறி. உத்தமன் உறையும் இடமாகிய உடம்பை ஓம்பிவருதல் உயிர்களின் கடமை. உள்ளம் பெருங் கோயில் என்றும், ஊனுடம்பு ஆலயம் என்றும், வாய் கோபுர வாசல் என்றும், கள்ளப்புலன் ஐந்தும் காளாமணி விளக்கு என்றும் கூறுவர் திருமூல நாயனர். பூசலார் நாயனர், உள்ளத்திலேயே கோயில் அமைத்து வழிபட்டமையைப் பெரியபுராணம் காட்டும். உள்ளத்தால் செய்யப்படும் பூசை ' அகப்பூசை ' எனப்படும். இவ்வாறு உயிர் உய்திபெறுதற்கான நெறிகளை உலகிற் காட்டும் இடங்களே திருக்கோயில்களும் மடாலயங்களும். இவற்றுள் ஒன்ருக விளங்கிவருவது தருமையாதீனம் ; இவ்வாதீனம் அநுபூதி நெறியை உலகிற்குக் காட்டும் தவநிலையம்.

## தருமையாதீனக் குருமுதல்வர் :

தருமையாதீனம், கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நிறுவிய மடாலயம் ஆகும்! பாண்டியநாட்டில் சீவில்லிபுத்தூரில் அவதாரம் செய்த ஸ்ரீ குருஞானசம்பந்தர், மதுரைச் சொக்கநாதனைக் கண்ணுக்கினிய பொருளாகப் பொற்றாமரைத் தீர்த்தத்தில் கைவரப் பெற்ற அருளாளர். தக்க ஆசாரியனை வேண்டிய அவ்வருளாளருக்குப் பெருமான் காட்டிய அருணெறிப்படித் திருவாரூர்ச் சித்தீச்சரத்தில், கயிலாய பரம்பரையில் வந்த கமலை ஞானப்பிரகாசரின் குருவருள் கிட்டிற்று. குருநாதர் ஆணைப்படி வில்வாரணியமாகிய தருமைக்கு எழுந்தருளி, ஞானோபதேசமும் சொக்கநாதர் பூசையும் செய்து கயிலாய பரம்பரையில் இவ்வாதீனத்தை ஞானப்பண்ணையாக்கித் தவம்பெருக்கினார் ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். 'அன்புமிக உண்டாய் அதிலே விவேகமுண்டாய் துன்பவினையைத் துடைப்பதுண்டாய் இன்பம் தரும் பூரணத்துக்கே தாகமுண்டாய் ஓடிவருங் காரணர்க்கு உண்மை வைத்து' அநுபூதிமானாக விளங்கினார்கள் ஸ்ரீ குருஞானசம்பந்தர். பிராசாதயோகம் முதலிய யோகானுபவங்களை எய்தி, பக்குவிகளுக்கு நல்லனுபவம் பொருந்த ஞானோபதேசம் புரிந்து இவ்வருளாளர் அருட்செங்கோல் செலுத்தி வரலாயினார். இஞ்ஞான பரம்பரையில் 26 ஆவது குருமாமணியாக இப்போது ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாட்சி புரிந்து வருகின்றார்கள்.

## தருமையில் குருவழிபாடு

இத்திருத் தருமையாதீன முதற்பெருங்குரவரின் குருபூசைத் திருநாள், ஸ்ரீ ஞானபுரீசுவரர் பிரமோற்சவத் திருநாளாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது. அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை வழங்குபவரே குருநாதர். மெய்யறிவைத்தரும் குருநாதன் இயல்பை, "உண்மை தருநாதன் நங்குரு நாதன்" என்பர் இவ்வருளாளர்.

ஞானபுரீசுவரர் ஞானம்பிகையோடு உடனாக எழுந்தருளியுள்ள தருமையில் முறைப்படி பிரமோற்சவம் பெறுகின்றார். பத்து நாட்களிலும் திருவீதிக்கு எழுந்தருளி, சார்வத்திரிக தீட்சை' செய்து எல்லா ஆன்மாக்களுக்கும் திருவருள் வழங்கி வருகின்றார். குருவழிபாடாக, தத்துவ சாத்திர விளக்கம் சமயபோத வகுப்பு நடைபெற உள்ளது. 'ஞான நூல்தனை ஓதல்

ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல் நன்கு ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை' எனக் குறிக்கப்பெற்றவை. அவ்வகையில் ஞானசாத்திரங்களாகிய உண்மை விளக்கம், திருக்களிற்றுப்படியார் முதலிய நூல்களை இப்பத்து நாட்களிலும் சிந்திக்கும் வாய்ப்புதிருவருளாற்கிடைத்துள்ளது. 21—5—75 முதல் 31—5—75 வரை நிகழும் இச்சமயபோத வகுப்பு ஞான பூசையாக - உண்மையான குருபூசையாக நிகழ்கின்றது. இதிலும், திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டிலும் கலந்துகொண்டு குருபூசையில் — ஞானபூசையில், தம்மை ஈடுபடுத்திக்கொண்டு இருமைப்பயன்களையும் அன்பர்கள் எய்துவார்களாக.

30—5—75 அன்று குருபூசைத் திருநாளும் 31—5—75 அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளி அருட்காட்சி வழங்குதலும் நிகழும் இவ்விரு திருநாட்களிலும் அன்பர்கள் கலந்துகொண்டு வழிபட்டுத் திருவருளுக்கும் குருவருளுக்கும் உரியவர்கள் ஆவார்களாக.

---

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் இராட்சசஆண்டு வைகாசித்திங்கள் 3 ஆம்நாள் (17—5—75) சனிக்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று திருநாரையூர் ஸ்ரீ திரிபுரசுந்தரி உடனுகிய ஸ்ரீ செளந்தரேசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெறும். "திருநாரையூர்த் திருப்பதிகங்கள்" என்ற நூல் வழங்கப்பெறுவதுடன் தலத் தேவாரத் திருப்பதிகப் பாராயணமும், விளக்கவுரையும் நிகழ்த்தப் பெறும். பக்தர்கள் வந்து வழிபட்டுப் பயன்பெறுவார்களாக.

உ

குருபாதம்

வேளாக்குறிச்சி ஆதீனத்திற்குச் சொந்தமான

திருச்செங்காட்டங்குடி ஸ்ரீ கணபதீச்சுரர் திருக்கோயில்

இராசகோபுரத் திருவாயில் திருக்கதவைத் திறந்துவைத்து,

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# ஆசியுரை

**சிறுத்தொண்டர் :**

திருச்செங்காட்டங்குடி வரலாற்றுச் சிறப்பும், புராணச் சிறப்பும் ஒருங்கிணைந்த தலம். இங்கு வாழ்ந்த சிறுத்தொண்டர் மாபெரும் வீரர். பரஞ்சோதி என்ற பெயரோடு திகழ்ந்தவர். பல்லவ அரசனின் சேனைத்தலைவராயிருந்து வட நாட்டில் வாதாபி என்னுமிடத்தில் சாளுக்கிய அரசனை வெற்றிகொண்டார் வாதாபி கணபதியைத் திருச்செங்காட்டங்குடிக்குப் பரிசுப் பொருளாகக் கொண்டுவந்தார். இவரது பக்தியின் சிறப்பை உணர்ந்த பல்லவ மன்னன் பெரும் பொருள் அளித்து இவருக்கு ஓய்வு கொடுத்தான். ஓய்வு பெற்றபின் திருச்செங்காட்டங்குடியில் நாள்தோறும் அடியவர் ஒருவருக்கு உணவிட்ட பின்பே தாம் உண்பது என்பதை நியதியாக மேற்கொண்டு வாழ்ந்துவந்தார். ஒரு குலத்திற்கு ஒரு மைந்தனாக உள்ள தமது மைந்தன் சீராளதேவனைக் கறிசமைத்து, அடியவர்க்கு இட்டு மகிழ்ந்தார். போர்வீரராக இருந்தபொழுது வழங்கிய பரஞ்சோதி என்ற பெயர் மறைந்து அடியவர்க்கு உணவளிக்கும் சிறிய தொண்டை மேற்கொண்ட காரணத்தால் இவருக்குச் சிறுத்தொண்டர் என்ற பெயர் நிலைத்தது.

**திருவெண்காட்டு நங்கை :**

இவர்தம் வரலாற்றில் சேக்கிழார் பெருமான் பெண்ணின் பெருமையை விளக்குகிறார். இதனைத் தமிழர் அனைவரும் தக்க

முறையில் போற்றிப் பாதுகாக்கவேண்டியவர்கள். சிறுத்தொண்டருக்கு அவர்தம் மனைவியாகிய திருவெண்காட்டுநங்கையிடம் சீராளதேவர் அவதரித்திருக்கின்றார். இதைச் சொல்லவந்த சேக்கிழார், இல்லறத்தை ஒரு விருட்சமாக-மரமாக உருவகித்து, அம்மரத்தின் வேராகப் பெண்குலத்தையும், மரமாக, கிளையாக ஆண்குலத்தையும் காட்டியிருப்பது எல்லோரும் மகிழத்தக்க செய்தியாகும்.

> நீராரும் சடைமுடியார் அருளினால் நிறைதவத்துப்
> பேராளரவர் தமக்குப் பெருகுதிரு மனையறத்தின்
> வேராகி விளங்கு திருவெண்காட்டு நங்கைபால்
> சீராள தேவரெனுந் திருமைந்தர் அவதரித்தார்.

இப்பாடலால், சேக்கிழார் நமக்கு அறிவிக்கின்ற தமிழகத்தின் பண்பும், அழியாத உண்மைத் தத்துவமும், பெண்ணின் பெருமையும் இனிதே விளங்குகிறது. இதைவிடுத்து, இக்காலத்தில் ஆடவரோடு பெண்டிர் சரிநிகர் சமானமாக இருப்பதே பெண்ணினத்திற்குப் பெருமையளிப்பது எனப் பேசிவருகின்றனர் சிலர். இது சிந்திக்கத்தக்கது.

பெண்ணின் பெருமை :

ஒருமரத்தின் கிளையை வெட்டினாலோ, தளிரைப்பறித்தாலோ, இலையைப் பறித்தாலோ மரத்தை வெட்டினாலோ மரம் அழிந்துவிடாது. மீண்டும் துளிர்க்கும் - தளிர்க்கும். பிரம்மாண்டமான அல்லது பெரியதொரு மரமாயிருந்தாலும், சிறிய செடியாயிருந்தாலும் அதன் வேரில் புழுவைத்துவிட்டால் பெரியதொரு மரமும் காய்ந்து சாய்ந்துவிடும். எனவே இந்த நாட்டின் மனித இனத்தின் வேராக விளங்குகின்ற பெண்குலம் மறைவிலிருந்தே மாண்புமிக்கசெயல்களையெல்லாம் செய்யவல்லது; அடிநிலையாக-அடித்தளமாக இருப்பவர்கள் பெண்கள் என்பதை இக்கருத்து காட்டி நிற்கிறது. இதனால் உலகியல் ஒழுக்க நிலைகளிலும்கூட ஆடவன் கெட்டாலும், குடும்பம் கெடாது. ஒரு பெண்மணி கெட்டால் குடும்பம் கெட்டுவிடும் என்று காட்டப்படுகிறது. இது பற்றியே ஆடவர் ஒழுக்கத்தைக்காட்டிலும் பெண்களின் கற்பையே இன்றும் நம் நாட்டில் முக்கியமாக-பெரிதாகப் போற்றுகின்றனர். ஆடவர் கெட்டால் குடும்பத்திற்கோ, சமுதாயத்திற்கோ, நாட்டிற்கோ அழிவைத்தராது. பெண்டிர் கெட்டால் நாட்டிற்கே கேடுவிளையும்; ஒரு குடும்பம் ஆவதும் அழிவதும் அக்குடும்பப் பெண்ணின் பொறுமை மிக்க பெருமையைப் பெறுத்ததே ஆகும். இது உலகியலோடு இணைத்துக் காணத்தக்கது.

ஒரு கட்டிடம் என்றால், அஸ்திவாரம் - அடித்தளம்தான் அதைத் தாங்கிநிற்கிறது. ஆனால் அஸ்திவாரம் இருப்பது யாருக்கும் தெரியாது. இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து வருகிற தத்துவநிலை. இது அறிவற்ற பொருளானாலும் தத்துவத்தில் மாறுபாடில்லை. இதேபோல், ஆட்சித்துறையில் எடுத்துக்கொண்டாலும் செயலகம் செம்மையாக – திறமையாக நடத்தப்படுமானால் அதனை இயக்கும் தலைவர்கள் எப்படியிருப்பினும் நிர்வாகம் பழுதுபடாது. இதை உலகியலில் குடும்பத்திலும், சமுதாயத்திலும், அரசியலிலும் ஒப்புநோக்கி உண்மை உணரலாம்.

## விநாயகர் திருவுருவம் :

இந்தத்தலம் வாதாபிகணபதியைக் கொண்டுவருவதற்கு முன்னமேயே புராண வரலாற்றில் பெயர் பெற்றுத் திகழ்வது. விநாயகர், நான்கு கைகளை உடைமையால் தேவர்கூறும், யானைத் தலை, காது, தும்பிக்கை இவற்றை உடைமையால் விலங்கின் கூறும், பேழை வயிறு, குறுகிய கால்கள் இவற்றை உடைமையால் பூதக் கூறும், வலப்பக்கத்தில் தந்தமின்மையால் பெண்கூறும், இடப்பக்கம் தந்தம் இருத்தலால் ஆண் கூறும் ஆக இவ்வாறு பல உறுப்புக்களும் கொண்ட ஓர் உருவமாகத் திகழ்கிறார். இத்தனை உறுப்புக்களும் கொண்டு ஏன் தோன்றினரென்று எல்லோரும் கேள்வி கேட்கின்றனர்.

புராணத்தைப் படித்தால்மட்டும்போதாது. அதில் பலரும் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் விடையிருப்பதையும் உணர்ந்து படிக்கவேண்டும்; சிலர் படிக்காமலேயே கேள்விகேட்கின்றனர். அவர்களுக்கு விளக்கம் சொல்லத்தான்வேண்டும்.

## கஜமுகாசுரன் :

ஆண்டவனைவிட, தன்னை அதிக புத்திசாலி என்று பலரும் நினைக்கின்றனர். இதற்கு உதாரணமாகத் திகழ்பவர்களுள் ஒருவன் கஜமுகாசுரன். அவன் பலகோடி ஆண்டுகள் தவமிருந்து பூரணமானவரம்பெற்றான். தனக்குப் பூதத்தாலும் மனிதனாலும், மிருகத்தாலும், ஆயுதங்களாலும் அழிவு நேரக்கூடாது; 1008 அண்டங்களையும் 108 யுகம் ஆளவேண்டுமென்று பரமேசுவரனிடம் வரம்கேட்டுப் பெற்றான். ஆனால் இவை எல்லாம் ஒன்று கூடிய ஒன்றால் தனக்கு அழிவு நேரக் கூடாது என்று கேட்க மறந்துவிட்டான். அவன் தனது ஆட்சிக்காலத்தில் தேவர்கள், மக்கள், விலங்குகள் ஆகிய அனைவருக்கும் துன்பம் செய்து கொண்டே வந்தான். சொல்லமுடியாத அல்லல் அடைந்த தேவர்களும் மக்களும் இறைவனிடம் முறையிட்டு வேண்டியதன்

பலனே விநாயகப் பெருமான் தோற்றம். தேவர், மக்கள், விலங்கு ஆகிய அனைத்து உருவமும் கொண்ட வடிவமாக விநாயகப் பெருமான் தோன்றினார். ஆயுதத்தால் கஜமுகாசுரனைச் சம்காரம் செய்யவில்லை வலது பக்கமுள்ள தந்தத்தை ஒடித்து அதனால் சம்கரித்தார். ஆனால் அவனை முழுவதும் அழிக்கவில்லை. அவனை ஒடுக்கித் தனது வாகனமாக வைத்துக் கொண்டார். முருகப்பெருமானும் இவ்வாறே சூரன், பதுமன் என்ற இரண்டு உயிர் ஒன்றாகத் திகழ்ந்த சூரபதுமனை ஒடுக்கி மயிலும் சேவலுமாக – வாகனமும் கொடியுமாகக் கொண்டது இங்கு நினைவுகூரத்தக்கது. எனவே தீயவர்களின் தீயசக்தியை அடக்கி, அவ்வுயிர்களை ஆட்கொள்ளுவதேயன்றி, அழித்து விடுவது இல்லை. இதுபற்றியேதான் திருஞானசம்பந்தரும், "ஆழ்க தீயவர்" என்னாது 'ஆழ்க தீயது' எனக் குறிப்பிட்டார். 'கஜமுகாசுரனைச் சம்கரித்தபோது இரத்தக் கறைபட்ட இடம் செந்நிறமாக இருந்ததால் இத்தலம் செங்காடு என்றாயிற்று' என்ற புராண வரலாறு மிக்க விநாயகர், கோயிலுக்கு வெளியில் எழுந்தருளி இருக்கிறார். வேண்டும் விநாயகர் என்று இவரை அழைக்கின்றனர். சிறுத்தொண்டர் கொண்டுவந்த வாதாபி கணபதி. கோயிலுக்குள் வீற்றிருக்கிறார்.

## வேளாக்குறிச்சி ஆதீனம் :

நம்நாட்டில் ஊர்க்குத் தனிப் பெயரும் அங்குள்ள திருக்கோயிலுக்கு வேறு பெயருமாக வழங்கப்பெறுகிறது. கருவூர் என்பது ஊர்ப்பெயர். ஆனிலை என்பது திருக்கோயிலின் பெயர். இதுபோலவே, திருவாரூர், திருவெண்ணெய்நல்லூர், திருப்பனந்தாள் என்பன ஊர்ப்பெயர்களாகவும், பூங்கோயில், அருட்டுறை, தாடகைஈச்சுரம் என்பன திருக்கோயிலுக்குரிய பெயர்களாகவும் வழங்கப்படுகின்றன. அவ்வாறே இங்கு ஊர்ப்பெயர் திருச்செங்காட்டங்குடி என்றும், திருக்கோயிலின்பெயர் கணபதீச்சரம் என்றும் வழங்கப்பெறுகின்றது.

இத்தகைய அருமையான, பெருமைக் குரிய திருச்செங்காட்டங்குடி கணபதீச்சுரம் என்னும் திருக்கோயில் வேளாக்குறிச்சி ஆதீனத்தின் ஆட்சியில் சிறந்து விளங்குகிறது. இத்திருக்கோயிலின் இராஜகோபுரத்திற்கு ஏனங்குடி விஜயராகவலு நாயுடு அவர்கள் இருபதாயிரத்துக்குமேல் செலவு செய்து திருக்கதவு தேக்குமரத்தால் அமைத்துக்கொடுத்திருக்கின்றார். இது பாராட்டுக்குரிய நிகழ்ச்சியாகும். நம்முடைய முன்னோர்கள் தாம்

வாழும் வீட்டினைப் பெரிதாகக் கட்டவில்லை, நம் நாட்டு மன்னர்களும் அரண்மனையைப் பெரிதாகக்கட்டவில்லை. ஆனால் அரன் மனையாக விளங்கும் திருக்கோயில்களை வலிமையுடையதாக – பெரிதாகக் கட்டினார்கள்.

## திருக்கதவுத் திறப்பு விழா:

மக்களுக்கு வெள்ளத்தினாலோ, புயலினாலோ, தீயினாலோ தீங்கு நேர்கிற காலமெல்லாம் பாதுகாப்பான இடங்களாக இன்றும் திகழ்ந்துவருகின்றவை திருக்கோயில்களே. நம் முன்னோர்கள் திருக்கோயில்களை வலுவோடும், பொலிவோடும் கட்டிவைத்தனர். நிலையில்லாதமக்கள், தங்களுக்குப் பயன்படும் வீடுகளை மண்ணால் கட்டிக்கொண்டனர். ஆனால் என்றும் நிலைத்து இருப்பவனாகிய இறைவனுக்கு என்றைக்கும் நிலைத்து இருக்கக்கூடிய கருங் கல்லால் கட்டி இருக்கின்றனர். அந்த வழியில் வந்த விஜய ராகவலு நாயுடு, ஆலயத் திருக்கதவுப் பணியினைக் காட்டு மரத்தால்செய்யாமல், நல்ல, உறுதியான தேக்குமரத்தால் செய் திருப்பது நம்முடைய பரம்பரை உணர்வு இன்னும் அற்றுப் போகவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது இப்பணியை வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர் அவர்கள் அமைதியாக இருந்தே இக்கோயிலுக்கு வேண்டிய ஆக்கப்பணிகளை எல்லாம்ஒன்றுகூட்டி நிறைவுசெய்து வருகிறார்கள். இந்தக் கதவுத்திறப்பு விழாவை அரசுத்துறையிலோ, நிர்வாக இலாகாவிலோ இருந்து ஒருவரை அழைத்துத் திறக்கச்செய்திருக்கலாம். ஆனால் பிடிவாதமாக நம்மை அழைத்துத் திறக்கச் செய்திருக்கிறார்கள். அன்று திரு மறைக்காட்டில் - வேதராண்யத்தில் நமது சமயாசாரியர்களாகிய அப்பரும் சம்பந்தரும் தேவாரத் திருமுறைகளைப்பாடி, கதவு திறக்கவும் அடைக்கவும்செய்தனர். இந்தக்கருத்தை அடியொட்டித் தானோ என்னவோ ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பீடத்தில் வீற்றிருக்கும் நம்மை அழைத்துக் திறக்கச் செய்திருக்கிறார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. எனவே தான் வெள்ளிச்சாவி கொண்டோ நாடா கொண்டோ திறக்கச் செய்யாமல் அப்பர் அருளிய "பண்ணின்நேர் மொழியாள்" என்ற திருப்பதிகத்தை ஓதுவார்களைக் கொண்டு பாடச் செய்து கதவு திறக்கச் செய்யப் பெற்றது. மக்கள் திருக்கோயிலுக்கு நாள் தோறும் வந்து வழிபட்டு நலமெலாம் பெற்று உய்வார்களாக. கோயில் பணியாளர்கள் வழிப்பாட்டிற்கு வருவோரை இன் முகத்தோடு வரவேற்று அவர்களது வழிபாட்டுக்கு உறுதுணையாக இருந்து உய்வார்களாக.

# திருநாரையூர் நம்பி*

திரு. என். இராமகிருஷ்ண

அநபாய சோழன் காலத்தில் திருநாரையூர் என்னும் தலத்தில் ஆதிசைவ பிராம்மண குலத்தில் தோன்றியவர் நம்பியாண்டார் நம்பி. அவருடைய தந்தையார் பொல்லாப் பிள்ளையாரைப் பூஜித்து வந்தார். அவருக்குத் தக்க பருவத்தில் தந்தையார், உபநயனம் செய்வித்துப் பூஜை முதலியன செய்யும் தகுதி பெறச் செய்தார். ஒரு நாள் தந்தையார் வெளியூர் சென்றதால் பிள்ளையாரைப் பூஜை செய்யும் வாய்ப்பு நம்பிக்கு ஏற்பட்டது. அவர் நிவேதனத்தைப் பிள்ளையார் முன் வைத்து உண்ணும்படி வேண்டினர். பிள்ளையார் உண்ணவில்லை. நம்பியாண்டார் நமபி ஏதோ தவறு ஏற்பட்டுவிட்டது என்று மனம் கலங்கித் தனது தலையைக் கல்லில் மோத முற்பட்டார். அப்போது பிள்ளையார் 'பொறு' என்று தடுத்து அவர் கொண்டு வந்த நிவேதனம் எல்லாவற்றையும் உண்டார். அது கண்ட நம்பி மனமகிழ்ந்தார். ஆனல் பள்ளிக்கூடம் சென்ருல் ஆசிரியர் அடிப்பார் என்று சொல்லி வேதம் முதலிய கலைகளைப் பிள்ளையாரையே ஓதியருள வேண்டும் என்று பிரார்த்தித்தார். பிள்ளையாரும் ஓதுவித்தார். நாள்தோறும் இவ்வாறே நடைபெற்றது. பிள்ளையார்மீது "திருவிரட்டைமணிமாலை" பாடினர்.

இச் செய்தி சோழன் செவிக்கு எட்டியது. அரசன் பிள்ளையாருக்கு நிவேதனம் செய்யும் பொருட்டு எல்லாவிதமான கனிகளையும் பண்டங்களையும் எடுத்துக்கொண்டு திருநாரையூர் வந்து சேர்ந்தான். நம்பியாண்டார் நம்பி மூலம் பிள்ளையாருக்கு எல்லாவற்றையும் நிவேதனம் செய்வித்தான். பிள்ளையாரும் அவற்றைத் துதிக்கை நீட்டித் திருவமுது செய்தருளினர். அது கண்ட சோழன் நம்பியாண்டார் நம்பியை வணங்கி சமயாசாரியார்கள் மூவர் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் வேதமாகிய தேவாரத்திருப்பதிகங்களை பூவுலகில் விளங்கச் செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார். நம்பியாண்டார் நம்பியும் கோயிலுக்குள் சென்று பிள்ளையாரை வணங்கி, தேவாரத்திருப்பதிகங்கள் இருக்குமிடத்தைத் தனக்கு அருள்புரிதல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்.

---

* தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இம் மாத ஜன்மநட்சத்திர வழிபாட்டைத் திருநாரையூரில் 17—5—75 அன்று நிகழ்த்தத் திருவுளம் கொண்டுள்ளார்கள். அதை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.

பிள்ளையார் கட்டளைப்படி அரசனும் நம்பியும் தில்லையை யடைந்து தில்லைவாழ் அந்தணர்களிடம் தெரிவித்தனர். அவர்கள் தேவாரம் பாடிய மூவரும் நேரில் வந்தால்தான் அறை திறக்குமென்று கூற, அரசன் உடனே நடராஜருக்கு விசேட பூஜை செய்வித்து சமய குரவர் மூவர் திருவுருவங்களையும் திரு வீதியுலாவாக எழுந்தருளச்செய்து கனகசபையை வலம்வந்து திருமுறைகள் இருக்கும் அறையின் எதிரே நிறுத்தி அறையைத் திறக்க வேண்டினன். அவர்கள் சோழஅரசரின் அறிவை வியந்து அறையைத் திறக்குமாறு பணித்தார்கள். கதவு திறக்கப்பெற்றதும் திருமுறைகள் பழுதுபட்டிருப்பதைக் கண்ட னர், எல்லோரும் வருந்தினர். சிவபெருமான் அருளால் "தேவாரத் திருப்பதிகங்கள்" இக்காலத்துக்கு வேண்டுவன வற்றை வைத்துவிட்டு மற்றையவற்றைச் செம்மண் மூடச்செய் தோம் என்று" அசரீரி வாக்கு எழுந்தது. அது கேட்டுச் சோழன் மனக்கவலை நீங்கி நம்பியாண்டார் நம்பியின் திரு வடியைவணங்கி, தேவாரப்பாக்களை திருமுறைகளாகவகுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அவரும் அப்படியே செய்தார். ஆனால் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்முறை அறியப் பெருமையால் திருஎருக்கத்தம்புலியூர் அடைந்து சிவபிரானை வணங்கித்தேவாரங்களுக்குப்பண்முறை அருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்போதும் ஓர் அசரீரி கேட்டது. "திருநீலகண்டப்பெரும்பாணன் மரபில் பிறந்த ஒரு பெண் ணுக்குப் பண்களை அருளிச்செய்தோம்" அப்பெண்ணைக் கனக சபையின் முன் கொண்டு வந்து தேவாரப் பதிகங்களுக்குப் பண்முறை வகுக்கக் கடவீர் என்று கூறவும், நம்பியாண்டார் நம்பியும், சோழ அரசனும், அவ்வாறே அப்பெண்ணைச் சிதம்பரம் அழைத்து வந்து எல்லோர் முன்னிலையிலும் தேவாரங் கட்குப் பண்முறை வகுக்கச்செய்தார்கள்.

பின்னர் திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பி சிலகாலம் வாழ்ந்து சிவபதம் அடைந்தார். அவர் அருளிய பிரபந்தங்களில் ஒன்று "திருத்தொண்டர் திருவந்தாதி"

திருநாரையூர் என்னும் தலம் சிதம்பரம் புகைவண்டி நிலையத் திலிருந்து தென் மேற்கே 10 கல் தொலைவில் உள்ளது. ஸ்தல விருட்சம் புன்னாகம். நாரை வழிபட்ட திருத்தலம். இவ்வூர் பொல்லாப் பிள்ளையார் திருவருளாலேயே திருமுறைகள் கிடைத்தன.

இறைவன் திருப்பெயர் — சௌந்தரேசுவரர்

இறைவி திருப்பெயர் — திரிபுரசுந்தரி.

# — இலங்கை —
# மாதோட்டத் திருக்கேதீச்சரம்

திருமுறைக் கலைஞர்
**வித்துவான். திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்**

**தோற்றுவாய் :**

"... ... கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச் சரங் கைதொழக் கடுவினை அடையாவே."

"தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய்கே தீச்சரம்
[ அதுதானே"

— சம்பந்தர் தேவாரம்.

சிவபூமி எனத் திருமூலரால் புகழப்பெற்றதும், விராட்புருடனது சரீரமாகிய பிரம்மாண்டத்தில் இடைகலை நாடிஓடும் தானம் எனச் சாந்தோக்கிய உபநிடதத்தால் வியந்து கூறப்பெற்றதுமான † இலங்கையின் ( ஈழநாட்டின் ) வடமாகாணத்திலே மன்னார்ப்பகுதியின் தென்மேல்பால் சுமார் 6½கல் தொலைவில் வடகடல் ஓரமாகச் சுமார் 3பர்லாங் இடைவெளி திகழத் தென்பால் திருக்கேதீச்சரம் என்ற தற்போதைய சிவத்தலம் (ஊர்) உள்ளது. ஆதியில் இப்பகுதி மாதோட்டநகர் ( மாந்தைநகர் ) என்று வழங்கியது.

---

† இலங்கை – இஃது எந்நாளும் அழியாமல் விளங்குவது; அன்றியும் எவ்விடத்தும் மணிகள் ( முத்து, இரத்தினங்கள் ) திகழ்வது; பற்பல வளங்களைக் கொண்டது; " எங்கணும் மணி இலங்குமலால் இலங்கை" என்பது தக்கிண கயிலாய புராணம். "தென்கடல் முத்துங் குணகடல் துகிரும் ஈழத்துணவும்" என்பது பட்டினப்பாலை.

ஈழநாடு – சிங்கள நாடு; இது மிகுதியாகச் சிங்கள மொழி வழங்கும் தேசம், இலங்கை. ஈழவர் – சிங்களர் என்ற வகுப்பினர்.

மாதோட்டம் என்பது ஊரின் பெயர். திருக்கேதீச்சரம் என்பது மாதோட்ட நகரின்கண் திகழ்ந்த சிவாலயத்தின் பெயர். தற்போது மாதோட்டம் என்ற பெயர் அருகிச் சிவாலயத்தின் பெயராகிய திருக்கேதீச்சரம் என்ற பெயரே பெருவழக்காக வழங்கிவருகிறது.

இத்திருக்கேதீச்சரத் தலம், ஆதியில் திருக்கயிலைச் சிகரங்களில் ஒன்று; இஃது ஆதிசேடனோடு மாறுகொண்ட வாயு தேவனால் தள்ளப்பெற்று ஈழப்பகுதியில் - தென்பகுதியில் வந்து விழுந்து பூமியுள் பதிந்து நின்ற காரணத்தால் ஈழக் கயிலாயம் அல்லது தென்கயிலாயம் எனவும், பிறகு கேது என்பவனால் பூசிக்கப்பெற்றதனால் கேதீச்சரம் - திருக்கேதீச்சரம் எனவும் பெயர் பெற்றது எனத் தல புராணம் கூறுகிறது.

[கேது + ஈச்சரம் = கேதீச்சரம். கேது - இவன் நவக் கிரகங்களில் ஒருவன்; இவன் பூசித்த ஈச்சரம் - சிவன்கோயில். திரு - அடைமொழி; தெய்வத்தன்மை அல்லது அழகு.]

## இலங்கை - மாதோட்டம் :

தென்கயிலாயநாதனை கேது பூசித்தபின்பு மகாதுவட்டா என்ற தேவதச்சன் ‡ பூசித்தான்; அச்சிவாலயத்தைச் சிற்ப முறைப்படி திருப்பணிபுரிந்தான்; ஊரையும் நன்முறையில் அமைத்தான். அதனால் அவ்வூர் மகாதுவட்டாபுரம் என்ற பெயர் பெற்றது என்று (கந்தபுராணம்) தட்சிண கயிலாய மான்மியம் கூறுகிறது. மகாதுவட்டாபுரம் என்ற பெயரே காலப்போக்கில் மாதோட்டம் என்று மருவி வழங்கலாயிற்று. அஃது எக்காலத்தில் மாதோட்டம் என்ற பெயர் வழங்கியது என அறிதற்கில்லை.

பௌத்த இலக்கியங்களில் கி. மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்தே மாதோட்டநகர் மகாதிர்த்தம் என்ற ஒரு பெயரைப் பெற்று வருகிறது. மகாதீர்த்தம் - இது மிகப் புனிதம் வாய்ந்த ஒரு புண்ணியத் தலம் என்பதாம்.

தமிழர்கள் காசியை (வாரணாசித் தலத்தை)ச் சிறந்த புண்ணியத் தலமாகக் கருதிச் சென்று வருவதுபோல, ஆதியில் இலங்கை நாட்டுப் பௌத்த மன்னர்களும், பௌத்த பிட்சுக்களும், பௌத்த மதத்தினரும், பிறரும் மகாதீர்த்தம் எனப் புகழப்

---

‡ இவன், சூரபன்மன் மனைவி பதுமகோமளையின் பாட்டனும், விசுவகன்மா என்பவனின் தந்தையும் ஆவான்.

பெரும் இம்மாதோட்ட நகரைப் புண்ணியத் தலமாகக் கருதி வந்ததாகத் தெரிகிறது.

"பௌத்த ஆலய பரிபாலனத்திற்குரிய சில விதிகளைக் குறித்துவிட்டு, அவற்றை மீறி நடப்பவன் மாதோட்டத்தில்—மகாதீர்த்தத்தில் பசுவைக் கொன்ற பாவத்தை அடைவானாக" என்று கதிர்காமக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

இதனால் மாதோட்டநகர் ஒரு புண்ணியத் தலம் என்பது தெரியவருகிறது.

முதலாம் இராசராச சோழன் மகன் இராசேந்திர சோழன் கி. பி. 1028 இல் ஈழநாட்டைக் கைக்கொண்டபோது இம்மாதோட்டநகர் இராசராசபுரம் எனப் பெயர்பெற்றது. இராசேந்திரன் ஆட்சியில் இம்மாதோட்டநகர் சுமார் பத்து சதுரமைல் பரப்புடையதாகத் திகழ்ந்தது; திருக்கேதீச்சரக்கோயில் இராசராசேச்சரம் என்ற பெயருடனும் விளங்கியதாம். கேதீச்சர ஆலயத்தைச் சுற்றிப் பாதுகாப்பின் பொருட்டு நன்னீர், கடல்நீர் தனித்தனியே கொண்டுள்ள இரண்டு அகழிகள் அமைக்கப் பெற்று இருந்தன என்பர்.

## இலங்கை - மாதோட்டம் கடற்கரைத் துறைமுகம் :

பண்டைக்காலந்தொட்டே இம்மாதோட்டநகர் கடற்கரைத் துறைமுகமாக விளங்கிவந்ததாகும். இம்மாதோட்டத் துறைமுகத்தின் வழியாகத்தான் தசரதராமன், அகத்தியன், அருச்சுனன் முதலியோர் இலங்கை சென்றனர் என்பர்.

இலங்கை - வடகடல் துறைமுகமாகிய இம்மாதோட்டநகர் கி. மு. 6 ஆம் நூற்றாண்டின் முன்னரே 'மகாதித்தா' என்ற பெயர் வழங்கியதாக மகாவம்சம் என்றநூல் கூறுகிறது. பாலிமொழியில் 'இத்தா' என்பது இறங்கும் துறைமுகம் அல்லது பெரிய துறைமுகம்—பெருந்துறை * என்பது பொருள். ஆகவே, மாதோட்டநகர் இலங்கைக்குரிய கப்பல் போக்குவரத்துத் துறைமுகம் என்பது அறியக்கிடக்கிறது.

---

* இப்பெருந்துறை என்ற பெயர் பிற்காலத்து ஆராய்ச்சியாளர் கண்ட பொருள். ஆனால் புராணத்தில் இல்லை.

பெருந்துறையுடன் திரு என்ற அடைமொழி கூட்டி ஊரைத் திருப்பெருந்துறை எனவும், திருக்கேதீச்சரப்பெருமானைத் திருப்பெருந்துறையீசன் எனவும் வழங்கினர் என்பர் ஆராய்ச்சியாளர். ஆதியில் இம்மாதோட்டத் திருநகரில் இராவணன் மாமனாகிய மயன் என்பவன் வாழ்ந்துவந்தான். அவன் சிவபக்தன்.

மாதோட்டத் துறைமுகத்தில் கடல் வாணிபம் மாசந்தை போல் விளங்கியது. மா - பெரிய. சந்தை - பொருள்களை விற்றலும் வாங்கலுமான பரிவர்த்தனை நிகழும் இடம். இம்மா சந்தை என்ற பெயர் நாளடைவில் மாந்தை என மருவி வழங்கிய தாம். ஆகவே மாதோட்டம் மாந்தை எனவும் பெயர்பெற்றது,

"புன்னைச் சோலை புளற்றெங்குசூழ் மாந்தை" என்பது முத்தொள்ளாயிரம்.

சிங்கள மொழியில் மாதோட்டம் என்பது மான்தொட்டா, மாதொட்டா, மாதோட்டை எனவும், மாந்தை என்பது மாந்தொவுட்டு, மாந்தொட்டு எனவும் வழங்குகின்றன.

மாதோட்ட நகரிலுள்ள கடல் துறைமுகச் சிறப்பினை, "வங்கம் மலிகின்ற கடல்மா தோட்ட நன்னகர்" எனவும், "வையம் மலிகின்ற கடல்மா தோட்ட நன்னகர்" எனவும் சுந்தரர் தேவாரம் கூறுகிறது.

மாதோட்டத் துறைமுகத்தில் கி. மு 3 ஆம் நூற்றாண்டின் முன்னரே பண்டம்மாற்றுவியாபாரம் உரோமானியர், கிரேக்கர், சீனர், அரேபியர், தமிழர் முதலியோர் செய்துவந்தனர். அக் கடல் வாணிபம் பண்டம்மாற்று கி. பி. 5 ஆம் நூற்றாண்டுவரை மிக உன்னத நிலையில் திகழ்ந்துவந்தது. பின்பு கி. பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் பண்டமாற்றுடன் நாணயமாற்றும் நேர்ந்த தால் கடல்வாணிபம் சற்றுக்குறையலாயிற்று. ஒருவாறு பண்டம்

---

அவன் மகள் மண்டோதரி. அவளும் தம் தந்தையைப் போலவே இளமைதொட்டே திருக்கேதீச்சரப் பெருமானிடம் பக்திபூண்டு ஒழுகியவள். தக்க வயதிலே சிவதீட்சை பெற்று ஆன்மார்த்த சிவபூசை செய்துவந்தவள். பின்னர் இராவணனை மணந்து வாழும் உயர் வாழ்விலும் சிவபூசையினை விடாது சிறப்பாகப் புரிந்துவந்தவள் ஒருநாள் சிவபூசை முடிவில் மண்டோதரி இறைவனை நேரில் தரிசிக்க விரும்பிப் பலவாறுவேண்டித் துதித் தாள். அப்போது சிவபெருமான் அம்மண்டோதரியின் வேண்டு கோளுக்கு இரங்கி அருள்புரிய அவள் முன் அங்குச் சிறுகுழந்தை வடிவில் எழுந்தருளிக் கிடந்தார். அச்சமயம் அங்குவந்த இரா வணன் சிவபெருமானாகிய இளங்குழந்தையைக்கண்டு மகிழ்ந்து தூக்கி எடுத்து உச்சிமோந்து பெருமகிழ்ச்சியுற்றான். அதனைக் கண்ட மண்டோதரியும் தம் கணவன் கையிலுள்ள சிறுகுழந்தை யைப் பெற்றுப் பெருமிதத்துடன் போற்றிப் பாராட்டினாள். பின்னர் குழந்தையாகிய சிவபெருமான் மறைந்தருளினார். இவ் வரலாறு உத்தரகோசமங்கைத் தல புராணத்தில் பேசப்பெறுகிறது.

மாற்றும் நாணய மாற்றும் கி. பி. 12 ஆம் நூற்றுண்டு இறுதி வரை நடைபெற்றுவந்தன. கி. பி. 13 ஆம் நூற்றுண்டிற்குமேல் கடல் வாணிபம் நின்றது. ஆனல் யாத்திரைவாசிகள் பல இடங்களிலிருந்து வருவதும் போவதுமாக இருந்தனர். கி. பி. 15 ஆம் நூற்றுண்டின்மேல் மாதோட்டப் பொருளாதாரம் குறையவே பலர் வெளியேறினர். கப்பல் துறைமுகம் இயற்கைக்கு மாறுபட்டு மண்மேடிட்டது. கப்பல்கள் வந்து தங்க வசதி இல்லாமல் போயிற்று.

இத்துறைமுகத்தில் நவரத்தின மணிகள், சங்கு, ஆமையோடு, யானைத்தந்தம், யானைகள், குரங்குகள், மயில்கள் பல உணவுப்பொருள்கள் இவற்றை ஏற்றுமதி செய்தனர்; பளிங்குப் பாத்திரம் (கண்ணுடிப்பாத்திரம்), மண்பாண்டம், அகிற்கட்டை, சந்தனக்கட்டை, பருத்தி ஆடை, பட்டாடை, கம்பிளி, மிளகு, குதிரைகள் முதலியவற்றை இறக்குமதி புரிந்தனர்.

இம்மாதோட்டத் துறைமுகத்திற்கு வடமேற்காக அண்மையில் தமிழ் நாட்டுத் திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர்க்கு அடுத்த குலசேகரன்பட்டினமும் சிறந்த கடற்கரைத் துறைமுகமாக இருந்துவந்தது. இவ்விரண்டிற்கும் அப்போது போக்குவரத்து வாணிபம் முதலியன நிகழ்ந்துவந்தன என்பர். (தொடரும்)

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

### தருமையாதீனம்

### ஸ்ரீ வீரட்டேசுவாசுவாமி தேவஸ்தானம், குறுக்கை

தஞ்சைப் பெரியகோவில் வார வழிபாட்டுக் குழுவினராகிய 63-மெய்யன்பர்கள் தங்கள் 4 ஆவது சோழநாட்டுத் தலயாத்திரையின்போது, அருள்மிகு திருக்குறுக்கை வீரட்டேசுவரர் ஆலயத்தில் வழிபாடுசெய்யும்பேறுபெற்றேம். தருமபுரம் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஆணைக்குட்பட்ட திருக்கோவில் என்றலே அதன் தூய்மையும், அதன் மேலாளர், சிப்பந்திகள் காட்டும் அன்பும், பரிவும் சொல்லத்தேவையில்லை. இன்று இறைவன் இறைவியைத் தரிசித்து மெய்சிலிர்த்து நின்றேம். பக்தர்களுக்கு இது என்றும் கிட்ட எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேம்.

K. சண்முகம்
அமைப்பாளர்,
தஞ்சைப் பெரியகோயில் வாரவழிபாட்டுக்குழு.

# " ஆட்கொள்ளும் வித்தகர் " *

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள், M. A, M. O. L.,

## முன்னுரை :

திருவாசகத்தின்கண் வரும் சிறந்த அழகிய இனிய பற்பல தொடர்களில், " ஆட்கொள்ளும் வித்தகர் " என்பது ஓர் அரும் பெறற் பெரும்பொருட்டொடர். திருவெம்பாவையில் 15 ஆம் செய்யுளில்,

" ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் ? "

எனவரும் வரியில், இவ்வினிய நல்ல தொடர், செவ்வித்திற் பயின்றிருத்தல் காணலாம். ஆட்கொள்ளும் வித்தகர், சிவ பெருமான். ஆட்கொள்ளப்பட்ட வித்தகர், மணிவாசகர். ஆட்கொள்பவரைத் தலைவர் அல்லது எஜமானர் என்றும், ஆட்கொள்ளப்படுபவரை அடியவர் அல்லது பணியாளர் என்றும் குறிப்பது வழக்கம்.

இங்கு மணிவாசகர் இறைவனை " ஆட்கொண்ட வித்தகர் " என்னாமல் " ஆட்கொள்ளும் வித்தகர் " எனத் திருவாய் மொழிந்தருளிய அருமைப்பாடு பெரிதும் போற்றுதற்குரியது. தம் ஒருவரை ஆட்கொண்டது மட்டுமேயன்றி, எல்லா உயிர்களையும் எல்லாக்காலத்தும் எல்லா இடத்தும் ஆட்கொண்டு அருள்புரியும் இயல்பினன் சிவபெருமான் என்பதனை, மணிவாசகர் இவ்வாற்றாற்புலப்படுத்தியருளினார். இதன்கண், உலகில் பிறரை ஆட்கொள்ளும் தலைவர்களுக்கும், தம்மை ஆட்கொண்டருளிய தலைவருக்கும் இடையேயுள்ள, வேறுபாடுகளைக் குறிப்பிற் புலப்பட விளக்கியருள்கின்றார் மணிவாசகர். நினைத்தொறும் நினைத்தொறும் அரிய பல உண்மைகளை உணர்த்திக்கொண்டு நிற்கும் இத்தொடரின் பொருள் நுட்பங்களை இங்கு நாம் ஒரு சிறிது சுருக்கமாகச் சிந்தித்து இன்புறுவோமாக !

---

* சென்னைத் தியாகராய நகர்த் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெறும் திருவாசக வகுப்பில் நிகழ்த்திய ஒருசில கருத்து விளக்கங்களின் தொகுப்பு.

(1) உலகத்தில் ஆட் கொள்ளுபவர் அனைவரும், தாம் ஆட்கொள்ளும் அடிமைகளால் தமக்கு விளையும் பலதிற நலங்களையும் வசதிகளையும் எண்ணியே, அடிமைகளை அமர்த்திக் கொள்வர். இதுதான் உலகியல் தலைவர்களின் இயல்பு. ஆனால் குறைவிலா நிறைவினன் ஆக விளங்கும் இறைவனாகிய அருளியல் தலைவனோ, அடியவர்களால் தனக்கு ஏதேனும் வசதியும் நலமும் விளையும் என்று எதிர்பார்க்கின்றிலன் தன்னை அடைந்தவர்களுக்குத் தான் இன்பம் தருதலை விரும்பியே, அவன் அடியவர்களை ஆட்கொள்கின்றான். "தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவான்", "சங்கரனார் தம்மைப்போலத் தம் அடியவர்கட்கும் இன்பம் அளிப்பவர்" என்பது சம்பந்தர் தேவாரம். "இன்பமே என்னுடைய அன்பே" என்பர் மணிவாசகர்.

(2) உலகியல் தலைவர்கள் தமக்கு ஆட்செய்ய, அனைவரையும் ஏற்றுக்கொள்வதில்லை. ஒருசிலரை மட்டுமே மிகவும் ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கொண்டு, மற்றவர்களை நீக்கி விடுவர். ஆனால் இறைவனோ தன்னை அடைந்தவர்கள் அனைவரையுமே விரும்பி ஆட்கொண்டு அருள்புரிகின்றான். "ஆரேனும் தன்னடைந்தார் தம்மையெல்லாம் ஆட்கொள்ளவல்ல நம் ஈசனார்" என்பது, திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகம். தன்னை அடையாதவர்களுக்கும் அருள் செய்தலை விரும்பி, அவர்களை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றான் இறைவன். "ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள் நல்கிச் சேண் நின்றவர்க்கு இன்னம் சிந்தை செய்ய வல்லான்" என்பது சம்பந்தர் தேவாரம்

(3) உலகத்துத் தலைவர்கள் தமக்குப்பணி செய்தற்குரிய ஆட்களைத் தேர்ந்தெடுக்குங்கால், மிக்க தகுதியும் திறமையும் உடையவர்களை மட்டுமே, தேர்ந்தெடுத்து அமைத்துக்கொள்வர். ஆனால் இறைவனாகிய தலைவனோ அங்ஙனம் இன்றி, மிகமிகத், தகுதி குறைந்தவர்களையும், ஒரு தகுதியும் இல்லாதவர்களையும். தானே தன் அருளால் விரும்பி வந்து ஆட்கொள்ளுகின்றான். "நாயிற்கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்" "யாவருக்கும் கீழாம் அடியேனை யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்", "என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்" "வான் பழித்து இம்மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்" "பொற்றவிசு நாய்க்கு இடுமாறு அன்றே நின் பொன்னருளே" என்றெல்லாம் மணிவாசகர் அருளிச்செய்திருத்தலைக் காணலாம்.

"நான் நின் அடியேன்; நீ என்னை
ஆண்டாய் என்றால், அடியேற்குத்
தானும் சிரித்தே யருளலாம்
தன்மையாம் என் தன்மையே" — திருச்சதகம். 58

(4) உலகத்திலுள்ள தலைவர்கள், தாம் தமக்கு ஊழியம் செய்தற்கு அமர்த்திக் கொள்ளும் பணியாளர்களுக்கு, அவர்கள் விரும்பும் அளவு ஊதியம் தர உடன்படார். பணியாளர்கள் விரும்பும் ஊதியத்திலும் சிறிது குறைவாகவே கொடுப்பர். குறைந்த ஊதியத்தில் நிறைந்த பல வேலைகளை வாங்கிக் கொள்ள விரும்புவதே உலகத்தில் எஜமானர்களின் இயல்பு! ஆனால் இறைவனாகிய எசமானனோ, தனக்கு ஊழியம் செய்யும் அடியவர்கள் வேண்டுவன எல்லாம் தருவான்; அவர்களின் ஆசை தீரும்படி அவர்கள் கேட்பதனைக் காட்டிலும் கூட, மிக அதிகமாகக் கொடுப்பான்; "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்பது அப்பர் தேவாரம். "வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்டமுழுதும் தருவோய் நீ" என்பது மணிமொழியாரின் திருவாசகம். "ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்" என்பது திருஞானசம்பந்தர் திருமொழி.

(5) உலகத்துத் தலைவர்கள், தமக்குரிய ஊழியர்களை அமைத்துக்கொண்டால் அவர்களுக்கு இடையே நிலவும் உறவு - தலைவர் என்னும் உறவு ஒன்றேயாகும். ஆனால் இறைவன் தன் அடியவர்களுக்கு வெறும் தலைவனாக மட்டுமில்லாமல், தந்தையாகவும் தாயாகவும் நண்பனாகவும் குருவாகவும் மற்றும் எல்லா உறவுமாகவும் அமைந்து நலம் புரிகின்றான். "ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்" என்பது திருநாவுக்கரசர் தேவாரம். "தாயும் நீயே தந்தை நீயே" என்பர் சம்பந்தர். "நண்பா என் உயிர் நாதா!" "எந்தை எம்தாய் சுற்றம் மற்றும் எல்லாம் என்னுடை பந்தம் அறுத்து என்னை ஆண்டு கொண்ட பாண்டிப்பிரான்" என்பர் மணிவாசகர்!

(6) உலகத்துத் தலைவர்ககளில் பெரும்பாலோர், தம் ஊழியர்களின்பால் போதிய அன்புகாட்ட மாட்டார்கள். அவர்களிடம் நல்லவர்களாக இருக்க மாட்டார்கள். தம் ஊழியர்களைக் கடுமையாகவும், கொடுமையாகவும் நடத்துதல் பலரிடம் காணப்படும் பொதுவான இயல்பு. ஆனால் இறைவனாகிய தலைவனோ அத்தகையவன் அல்லன். அவன் அடியார்களுக்கு மிகவும் நல்லவன். அடியவர்களிடம் அன்பும் பரிவும் அருளும் காட்டுபவன். "கண்ணுளார் கருவூருள் ஆனிலை அண்ணலார் அடியார்க்கு நல்லவரே" என்பது சம்பந்தர் தேவாரம்.

(7) உலகத்துத் தலைவர்களில் பலர், தம் ஊழியர்கள் தம்மை அணுகமுடியாதபடி அரியராக இருப்பர். அத்தகையவர்களை நினைக்கும் போதெல்லாம், ஊழியர்களுக்கு அச்சமே மிகுதியும்

ஏற்படுவதுண்டு. ஆனால் இறைவனாகிய தலைவனோ அத்தகையவன் அல்லன். அவன் அடியவர்களுக்கு மிக மிக எளியவன். “ அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன் ” என்று தன்னைத்தானே இறைவன் சுட்டிக்கொள்வதாக ஒரு தனிப் பாடலும் உண்டு. சிவபெருமான் ஆகிய தலைவன், அடியவர்களின் அச்சத்தைப் போக்கி ஆட்கொண்டு அருளுவான். “ அச்சம் தீர்த்து ஆட்கொண்டான், அமுதம் ஊறி அகம் நெகவே புகுந்து ஆண்டான் அன்பு கூர ” “ அறம் பாவம் என்றிரண்டு அச்சம் தவிர்த்து என்னை ஆட்கொண்டான் ” “ அச்சம் தவிர்த்த சேவகன் வாழ்க ” என்பர் மணிவாசகர்.

(8) உலகத்துத் தலைவர்கள் பலரிடத்தில் ஊழியம் செய்வது மிக மிகக் கடினமாக இருக்கும். தமது ஊழியர்களைப் பலவகைகளில் அலைக்கழித்து, இடையறாது கடினமான வேலைகளைத் தொடர்ந்து செய்யும்படி, ஏவிக்கொண்டேயிருப்பர் சிலர் (Sadism). ஆனால் இறைவனாகிய தலைவனோ, தன் ஊழியர்களுக்கு எவ்வித கடினமான வேலைகளையும் அளிப்பதில்லை தனது அடியவர்கள் எவ்வகையான வேலையையும் செய்ய வேண்டாம் என்றே, அவன் பணித்தருள்கின்றான்.

சமயத்துறையில், அருளியல் வாழ்வில், “ சும்மா இருத்தல் ” * என்பது ஒருசிறந்த பெரும்பேறு. “ இன்று வருமோ? நாளைக்கே வருமோ ? மற்று என்று வருமோ ? சும்மா இருக்கும் சுகம் ” என்று ஏங்கி இரங்குகின்றார் இராமலிங்கர். “ சும்மா இரு ” என்பதே முருகன் அருணகிரிநாதருக்குச் செய்த அருளியல் உபதேசம். அதன் அருமை பெருமைகளைப் பாராட்டிச் “ சும்மா இரு சொல்லற என்றலுமே, அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே ” என்று, அருணகிரிநாதர், தமது கந்தர் அநுபூதியில் வியந்து கசிந்து உருகுகின்றார். அருணகிரிநாதரின் இத்திருமொழியில் மிகவும் ஆழ்ந்து ஈடுபட்டு, “அருணகிரிநாதர்

---

* “ There is a stage in life when a man does not need even to proclaim his thoughts, much less to show them by outward action. Mere thoughts act. They attain that power. Then it can be said of him that his seeming INACTION constitutes his ACTION. I must confess that I am far from that state. All I can say is that my striving is in that direction.”

—Mahatma Gandhi.

அநுபவம் நாயேற்குக் கருணை பொழி போரூரா காட்டு " என்கின்றார் சிதம்பர சுவாமிகள். இதனையே மாணிக்கவாசகர் "என்னுடைய செயல் மாண்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்கின்றார். திருக்களிற்றுப்படியார் ஆசிரியர், "செய்தற்கு அரிய செயல் பலவும் செய்த சிலர், எய்தற்கு அரியதனை எய்துகின்றார்; ஐயோ! நாம் செய்யாமை செய்த செயலறுக்கலாய் இருக்கச் செய்யாமை செய்யாதவாறு" என்று சிந்தை நொந்து உரைக்கின்றார். உலகத்திலுள்ள தலைவர்கள் வற்புறுத்திப் பற்பல வேலைகளை வாங்குபவர்களாக இருக்க, இறைவனாகிய தலைவனே தன் அடியார்களைச் "சும்மா இருங்கள்" என்று சொல்லி ஆட்கொள்ளுகின்றான் எனின், அவ்வித்தகனின் வியக்கத்தக்க பெருமையினை என்னென்பது. (தொடரும்)

---

கடிதம்

Mi. Pa. SOMASUNDARAM,

Phone: 665758. 'PACHAI' 3327 Anna Nagar. Madras. 600 040.

மிகுந்த பக்திக்கும் வணக்கத்திற்கும் உரிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருமுன்பிற்கு, வணக்கங்கள்.

மிக்க ஆசியுடன் அனுப்பிய ஆதீனப் புத்தாண்டுப் பஞ்சாங்கம் கிடைத்தது; வணக்கம். தபாலில் பஞ்சாங்கம் வந்தபோது புத்தாண்டு நாளையொட்டி மயிலையில் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகளின் பஞ்சாங்க படன நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குவதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்தேன். அப்படியே தபாலில் வந்த பஞ்சாங்கத்தையும் எடுத்துச் சென்றேன். அழகான முறையில் எழுதப்பட்டுள்ள பஞ்சாங்க விளக்கப் பகுதியை எனது முன்னுரையிலே படித்துக்காட்டினேன்.

" தருமை ஆதீனப் பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள இந்த ஐந்துறுப்பு விளக்கத்தையே, பஞ்சாங்கபடன நிகழ்ச்சிக்கு எனது முன்னுரையாகக் கொள்ளவேண்டும்" என்று கூறினேன். சாஸ்திரிகளும் சபையோர்களும் ஆதீனப் பஞ்சாங்க விளக்கத்தைப் பெரிதும் அனுபவித்தார்கள் என்பதைக்கண்டேன். அதை எழுதிய அன்பருக்கும் எழுதுவித்த தங்களுக்கும் எனது வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிக்க அன்புடன் தங்கள்,

மீ. ப. சோமசுந்தரம்.

# நந்திக் கதம்பம். 4.

"நஜன்"

( மலர் 34, இதழ் 5, பக்கம் 220 இன் தொடர்ச்சி )

## தருமதேவதையே ரிடபம்

" தோடுடைய செவியன் " என்று ஆரம்பித்துப் பாடிய திருஞானசம்பந்தர் விடை ஏறி என்று சிவபெருமான் காளை (விருஷபம்) மீது ஏறி வருவதைக் குறிப்பிடுகிறுர். இறைவன் ஏறுகின்ற விடை சாதாரண காளைமாடு அல்ல. இந்தவிடைக்கு ஐராவதம் என்ற யானையும் உச்சஸ்சிரவஸ் என்ற குதிரையும் ஈடாகா.

சிவபெருமான் விடையை வாகனமாகக் கொண்டதில் சிறந்ததோர் கருத்து உண்டு. விடை தூய வெண்ணிறமுள்ளது. காளை, பசு இவைகளைக்கொண்ட ஆனினமே தர்மத்தின் (அறம்) வடிவம் என்பது ஆன்ருேர் கொள்கை. தூய வெண்ணிறமும் தர்மத்தையே குறிக்கும்.

பசு தர்மத்தின் வடிவம்; மிகவும் பொறுமை படைத்தது. காளை அத்துடன் ஆண்மையுப்கொண்டது. அதனுல் விடையை " அடல்விடை " எனக் குறிப்பிடுவர். அறத்தின் மூலம் உலகைப் பரிபாலிக்கும் இறைவனுக்குத் தரும தேவதையான விடையே ஊர்தியாக அமைந்தது பொருத்தம்தானே !

அறம் என்கிற ஒழுங்கு முறையே தருமதேவதையைக்காத்து வருகிறது. அந்த தருமதேவதையே ரிடபம். அறம் எல்லாவற்றையும் நடத்துகிறது; அந்த அறதேவதையைச் சிவபெருமான் நடத்துகிருர். இதைத்தான் நாவுக்கரசர் " விடையேறும் வித்தகன் " என்று குறிப்பிடுகிருர்.

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாட சடைதாழ அங்கையில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

அறக்கடவுளே சிவபெருமான் வாகனமானதைக் கந்த புராணம் பின்வருமாறு கூறுகிறது.

தருமதேவதை, பிரளய காலத்தில் அழியாமல் இருக்கும் சிவபெருமானை அடைய, தன்னை வாகனமாக ஏற்கும்படிக் கேட்டது. அவ்வேண்டுகோளுக்கு இணங்கிய சிவபெருமான் ஒவ்வொரு யுகத்திலும் நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்ற பாதங்களால் நடக்கக்கடவை என்ளுர். பின், "நான் உனக்கு உயிராய் இருந்து உன்னை நடத்துவதால் நம்மை வணங்குவோர் செய்யும் பாவமும் அறமாகும்" என்ளுர். அதுமுதல் அறவிடை சிவபெருமானின் ஊர்தியாயிற்று.

## பரிக்ஷித்தும் தருமதேவதையும்

அர்ஜ்ஜுனனின் பேரனை பரிக்ஷித் பாண்டவர்களுக்குப்பின் அரசுப் பொறுப்பை ஏற்ருன். தருமதேவதை காளை வடிவம் கொண்டு ஒருகாலால் நடந்துவந்தது. பூமிதேவியான பசுவைக் கண்டு "நீ ஏன் கண்ணீர் விடுகிருய்?" என்று கேட்டது. பூமிதேவி, "என்னசெய்வேன்! எல்லா நன்மைகளுக்கும் காரணமான கிருஷ்ணபரமாத்மா என்னை விட்டு விலகினர். இனிமேல் இங்குக் கலிபுருஷனின் அநியாயம் மேலிடப்போகிறது. தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பக்தர்களுக்கும் கேடு உண்டாகப் போகிறது. வருணுசிரமதர்மம் சத்தியம் தவம் முதலியவைகளுக்கும் அழிவுநேரப்போகிறது. இதனுல் உன்னுடைய நான்கு பாதங்களில் மூன்றுக்குக் கேடுவந்திருக்கிறது. இதைக்கண்டு தான் துக்கிக்கிறேன் என்றது.

அச்சமயத்தில் அங்கே கலிபுருஷன் வந்து, அந்த எருதையும் பசுவையும் கைத்தடியால் அடித்தான். அதைக்கண்ட பரிக்ஷித் மகாராஜா அவனைத் தடுத்தார். அப்போது தருமதேவதையான காளை அவனுக்குச் சில தரும நியாயங்களை எடுத்துக் கூறியது. அதைக்கேட்டதும் பரிக்ஷித்து அதைத் தரும தேவதை என்றும், பசுருபத்துடன் இருப்பதைப் பூமிதேவி என்றும், அடித்தவன் கலிபுருஷன் என்றும் உணர்ந்தான்.

தவம், சௌசம் ( தூய்மை ), தயை, சத்தியம் இவை நான்கும் தரும தேவதையின் நான்கு கால்கள். இவற்றில் மூன்று, கர்வம் ஜனசங்கம் மதம் என்ற தீய குணங்களால் ஒழிந்தன. மீதியிருப்பது சத்தியம் என்ற கால் ஒன்றே. அந்த ஒன்றையும் கலி புருஷன் வெட்டப்பார்க்கிறுன். இதை உணர்ந்த பரிக்ஷித் உடைவாளை உருவி கலிபுருஷனை வெட்ட முயற்சித்தான். கலி புருஷன் காலில் விழுந்து சரணம் என்றுன். பரிக்ஷித் அவனைப் பார்த்து, " நீ அதருமத்தின் துணை. ஆகவே என் நாட்டில் வாழக்கூடாது. சூது, குடி, பொருமை, பொன் ஆகியவற்றை உன் இருப்பிடமாகக்கொள் " என்று கூறி அனுப்பினுன்.

சிவபெருமான் கோவில்களில் சிவபெருமான் எதிர்புறத்தில் பார்த்துக்கொண்டிருக்கும் இடபம் மூன்று கால்களை மடக்கி, ஒரு காலை நிமிர்த்தியிருத்தலைக் காணலாம். அதுவே சிவபெருமான் கட்டளைப்படி கலியுகத்தில் தருமதேவதை ஒருகாலினுல் நடந்து வருவதை உணர்த்துவதாகும்.

## அனுமதி பெறவேண்டும்

" வள்ளலார்பெருமானுக்கு வாய் கோபுரவாசல் " என்கிறுர் திருமூலர். கோபுரத்தை வாய் என்றுல் நந்தியை வாய்க்குள் இருக்கும் நாக்கிற்கு ஒப்பிடலாம். நம்முடைய நாக்கின் உதவியால்தான் எப்பொருளும் உடம்பினுள்செல்லக்கூடும். அதுபோல நந்தி எம்பெருமான் அருள் பெற்றுக் கோவிலுக்குச் சென்று வழிபடுதல் வேண்டும் என்பது விதி. ஞானத்தால் அருள் பெற்ற ஆன்மாக்களின் முதல்வராக நந்தியை அமைத்துள்ளனர்.

சிவபெருமானை ஆலயத்தில் தரிசிக்குமுன் நந்திதேவரின் உத்திரவு பெறவேண்டும். நந்திதேவரின் ஸ்துதி ;-

நந்திகேச மகா பாக சிவத்யான பராயண ।
கௌரீ சங்கர ஸே வார்த்தம் அனுஜ்ஞாம் தாதுமாஹஸி ॥

" சிவனடியில் சரணம் புகுந்து சிவத்தியானத்தில் ஆழ்ந்திருக்கும் மகா புண்ணியம் பெற்ற நந்திகேஸ்வரரே சன்னிதிக்குச் சென்று உமையையும் ஈஸ்வரனையும் தரிசிக்க எனக்கு உத்திரவு தருக." என்பது இந்த ஸ்துதியின் அர்த்தம்.

( தொடரும் )

# செய்திகள்

## ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

### நாண்மங்கல விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜென்ம நட்சத்திரமாகிய சித்திரை ஆயில்யத்தன்று, திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. அன்று ஸ்ரீ அபிராமி அம்மை உடனுறை ஸ்ரீ அமிர்தகடேசுவரருக்கு மகந்யாசருத்ரஜபமும் வசோர்த்தாரையுடன் உருத்திரவேள்வியும் அபிஷேகமும் ஸ்ரீ சுவாமிக்கும், ஸ்ரீ அபிராமி அம்மைக்கும், ஸ்ரீ காலசம்கார மூர்த்திக்கும் சகஸ்ரநாமார்ச்சனையும் சிறப்பாக நடைபெற்றன. நாண்மங்கல விழா மலராக 'சைவாநுட்டான விதியும், அனுட்டான அகவலும்' என்ற நூல் வெளியிடப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி தலத் தேவாரத் திருப்பதிகங்களையும், அபிராமி அந்தாதியையும் ஓதச் செய்து வழிபாடாற்றி, அன்பர்களுக்குத் திருவருட் பிரசாதத்தையும், நாண்மங்கலநாள் விழா மலரையும் வழங்கியருளினார்கள்.

### சிதம்பரத்தில் நாண்மங்கலநாள் வழிபாடு

தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் தமது ஜென்ம நட்சத்திர நாட்களில் பாடல்பெற்ற சிவதலங்கள்தோறும் அபிஷேக ஆராதனைகள் செய்வித்தும், தலத்திருப்பதிகங்களை ஓதச்செய்தும் அச்சிட்டு அன்பர்களுக்கு வழங்கும்படியும் செய்தருளினார்கள். பாடல்பெற்ற சிவதலங்கள் அனைத்தும் அவர்கள் அருளாட்சிக்காலத்தில் வழிபடப் பெற்று நிறைவுற்றன. அவர்களது அருள்வழியைப்பின்பற்றி அருளாட்சி புரிந்துவரும் 26 வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களைப்போலவே பாடல் பெற்ற சிவதலங்களில் வழிபாடு செய்விக்கத்திருவுளம் பற்றினார்கள். அதன்படி, தேவாரத்திருப்பதிகங்களை நாட்டிற்கு வழங்கிய தலமாகிய சிதம்பரத்தில் முதன் முதலாக வழிபாடு தொடங்கப் பெற்றது. ஸ்ரீ கற்பகவிநாயகர், ஸ்ரீ திருமூலநாதர், ஸ்ரீ சிவகாமியம்மை, ஸ்ரீ இரத்தினசபாபதி, ஸ்ரீ அழகியதிருச்சிற்றம்பல

முடையார் ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை கள் செய்விக்கப்பெற்றன. ஸ்ரீ நடராசப்பெருமானுக்கு சகஸ்ர நாமார்ச்சனை செய்து வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. 'சிதம்பரம் - திருப்பதிகங்கள்' என்றநூல் வெளியிடப்பெற்று அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது.

## ஸ்ரீ உமாபதிதேவ நாயனுர் குருபூஜை விழா

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் சந்தானுசாரியருள் நான்காமவராகிய ஸ்ரீ உமாபதிதேவ நாயனுர் குருபூஜைத் திருநாள் 24—4—75 அன்று காலை விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை 7 மணிக்குத் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திரு. வி சபேசன் அவர்களால் " உமாபதிதேவர் வரலாறும் அருள் நூல்களும் " என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தப்பெற்றது.

சிதம்பரத்தில்: தருமையாதீனச் சார்பில், சிதம்பரம் கொற்ற வன்குடி ஸ்ரீ உமாபதிதேவ நாயனுர் திருமடத்தில் நாயனுருக்குப் பகலில் அபிஷேக ஆராதனைகளும், மாலையில் தில்லைத் திருக் கோயிலில் ஸ்ரீ நடராசப்பெருமானுக்கு சகஸ்ர நாமார்ச்சனையும் நடைபெற்றன. அன்பர்கள் வழிபாட்டில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில், ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு 5—5—75 அன்று காலையில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், அன்று இரவு ஆதீன ஓதுவாமூர்த்திகளின் திருமுறைப் பாராயணத்தொடு ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருவீதியுலாவும் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினுர்கள். திருவீதியுலாவில் தருமையாதீனத் தமிழ்ப் புலவர், சிரோமணி, திரு. வி சபேசன் அவர்களால் " அற்புத விளக்கச் சொற் பொழிவு " நிகழ்த்தப்பெற்றது.

## சித்திரைத்திங்கட் பெருவிழா.

### திருவையாற்றில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருவையாறு ஸ்ரீ தர்சம்வர்த்தனி அம்பாள் உடனுகிய ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில், சித்திரைத்திங்கட் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. 16—4—75 அன்று கொடி

யேற்றமும், 20—4—75 அன்று தன்னைத்தான் பூஜித்தல் இடப வாகனக் காட்சி முதலியனவும், 22—4—75 அன்று கோரதக் காட்சியும், 24—4—75 அன்று திருத்தேர்த்திருவிழாவும், 25—4—75 அன்று தீர்த்தம் கொடுத்தருளலும் நிகழ்ந்தன. 27—4—75 அன்று ஏழூர் வலம் வருதலாகிய சப்தஸ்தானத் திருவிழா நிகழ்ந்தது. அவ்வத்தலங்களிலும் பக்தர்கள் திரளாக வந்து வழிபட்டுப் பயன் பெற்றனர். விழா நாட்களில் நாள்தோறும் விசேஷ நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் திருவீதியுலாவும், சமய விரிவுரைகளும் நிகழ்ந்தன.

17—4—75 அன்று தருமையாதீனத்தமிழ்ப்புலவர். திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. 18—4—75 அன்று திரு. சு. மு. சுந்தரராசன், 19—4—75 அன்று திருவதிகை. திரு. சண்முகசுந்தர தேசிகர், 20—4—75 அன்று திருப்பனந்தாள். திரு. மு. சுந்தரேசம்பிள்ளை, 21—4—75 அன்று தருமையாதீனத்தமிழ்ப்புலவர். திரு. வி சா. குருசாமி தேசிகர் ஆகியோர், முறையே "ஞானத்தமிழ்" "அப்பர் அருந்தமிழ்" "சுந்தரர் செந்தமிழ்" மணிவார்த்தை" "திருமுறைப் பயன்" ஆகிய தலைப்புக்களில் விரிவுரையாற்றினர். அன்பர்கள் பலர் வந்து வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

## திருக்கடவூரில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் உடனுறை ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கட் பெருவிழா, சிறப்பாக நடைபெற்றது 16—4—75 அன்று கொடியேற்றமும், 18—4—75 அன்று திருக்கல்யாணமும், 20—4—75 அன்று இடப வாகனக் காட்சியும், 21—4—75 அன்று காலசம்காரக்காட்சியும், 23—4—75 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 25—4—75 அன்று தீர்த்தம் கொடுத்தருளலும் நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் காலசம்காரத் தரிசனத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றி, பக்தர்களுக்கும் அன்பர்களுக்கும் பிரசாதம் வழங்கியருளினார்கள். விழா நாட்களில் திருவீதியுலாவின்போது சிறந்த நாதசுர இன்னிசை, சமயச் சொற்பொழிவுகள் முதலியன நடைபெற்றன. 17—4—75 அன்று திருவதிகை திரு. ரா. சண்முக சுந்தரம் செட்டியார், 18—4—75 அன்று தருமையாதீனத்தமிழ்ப் புலவர். திரு. சி. அருணைவடிவேல் முதலியார், 19—4—75 அன்று தருமையாதீனத்தமிழ்ப்புலவர் திரு ச. தண்டபாணி தேசிகர், 21—4—75 அன்று புலவர். திரு. இரா. செல்வக்கணபதி ஆகியோர்

விரிவுரையாற்றினர். 20—4—75 அன்று வேலூர் திரு. கே. குண பூஷணம் குழுவினரால் மார்க்கண்டேயர் வரலாறு இன்னிசைக் கதையாக நிகழ்த்தப்பெற்றது. பக்தர்கள் வந்து வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

### திருப்பனந்தாளில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ பிருகந்நாயகி உடனுகிய ஸ்ரீ அருண ஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. 16—4—75 அன்று கொடியேற்றமும், 20—4—75 அன்று இடபவாகனக் காட்சியும் 22-4-75 அன்று திருக்கல்யாணக்காட்சியும், 24—4—75 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 25—4—75 அன்று தீர்த்தம் கொடுத்தருளலும் விசேஷ நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் நிகழ்ந்தன. 17—4—75 அன்று தருமையாதீனத் தமிழ் புலவர் திரு, சி. அருணைவடிவேல் முதலியார், 18—4—75 அன்று திருவதிகை திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார் 19—4—75 அன்று திருவையாறு திரு, சுவர்ணகாளீஸ்வரன், 21—4—75 அன்று தருமையாதீனத் தமிழ்ப்புலவர் திரு. வி. சபேசன் ஆகியோரால் விரிவுரைகள் நிகழ்த்தப் பெற்றன. அன்பர்கள் பலர் வந்து வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

### சீகாழியில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட் பெருவிழா பத்துநாட்கள் சிறப்புற நிகழ்ந்தது. 16—4—75 அன்று கொடியேற்றமும், 17—4—75 திருமுலைப்பால் திருவிழாவும், 19—4—75 வெள்ளிரதக் காட்சியும், 20—4—75 திருக்கல்யாணத் திருவிழாவும், 23—4—75, 24—4—75 ஆகிய நாட்களில் திருத்தேர்ப் பெருவிழாவும். 25—4—75 அன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்றன. விழா நாட்களில் சிறந்த நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் திருவீதியுலாவும் பண்ணிசைவாணர்களின் திருமுறைப்பாராயணமும் நடைபெற்றன. திருமுலைப்பால் திருவிழாவன்று ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருஞானசம்பந்தர் சிவிகையில் எழுந்தருளியானதும், குடந்தை, பண்ணாராய்ச்சி வித்தகர், திரு. V. சுந்தரேசனர் அவர்களுக்கு 'திருமுறைக் கலாநிதி' என்னும் பட்டம் பொறிக்கப்பெற்ற பொற்பதக்கமும், 501 ரூபாய் கொண்ட பணமுடிப்பும் வழங்கி ஆசிக் கவசமாகப்

பொன்னுடை போர்த்தியருளினார்கள். பின்னர் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி மாண்புமிகு, திரு. N கிருஷ்ணசாமி ரெட்டியார் பி ஏ., பி.எல. அவர்கள் அற்புத விளக்கவிரிவுரையைத் தொடங்கி வைத்தார்கள். தொடர்ந்து, வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளும் மற்றும் பல அறிஞர் பெருமக்களும் அற்புத விளக்கவிரிவுரை நிகழ்த்தினர். திருஞானசம்பந்தர் பிரம தீர்த்தக்கரைக்கு எழுந்தருளியானதும், தோணியப்பர் ஸ்ரீ உமாதேவியாரோடு இடபவாகனருடராய் எழுந்தருள ஞானப் பால் வழங்கும் காட்சி நடைபெற்றது. பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் பெருமக்களுக்கும், பக்தர்களுக்கும் திருமுலைப்பால் விழாப் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

17–4–75 அன்று மாலை உயர்மன்ற நீதிபதி மாண்புமிகு N. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையுரையாற்றி கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்தார்கள் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலனார், வித்துவான்; திரு. வி. சா. குருசாமி தேசிகர் திருமுறைக்கலாநிதி, திரு. N. சுந்தரேசனார் ஆகியோர், கருத்தரங்கில் கலந்துகொண்டு விரிவுரையாற்றினார்கள். கலைமாமணி, திரு P சுவாமிநாதன் அவர்களால் 'காழிக் கவுணியன்' என்றதலைப்பில் இன்னிசைநாமாவளிக்கதை நிகழ்த்தப்பெற்றது. 18–4–75 அன்று வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத்தப்பிரான் சுவாமிகள் தலைமையில், அப்பர் தேவாரத்தில் விஞ்சி நிற்பது தொண்டு நெறியா? பக்தி நெறியா? என்ற தலைப்பில் பட்டி மண்டபம் நிகழ்ந்தது. திரு. அ. கலியபெருமாள் எம். ஏ. திரு. சொ. முத்தையன் எம். ஏ. திரு. அறிவொளி எம். ஏ. ஆகியோர் 'தொண்டு நெறியே' என்ற தலைப்பில் வாதிட்டனர். திரு. இரா செல்வக்கணபதி பி, ஏ. திரு. ஆ. செகந்நாதன் எம் ஏ. புலவர், திரு. சோம. இளவரசு ஆகியோர் 'பக்தி நெறியே' என்ற தலைப்பில் வாதிட்டனர். அப்பர் தேவாரத்தில் விஞ்சி நிற்பது 'தொண்டு நெறியே' என்று பலமேற்கோளுடன் நடுவர் தீர்ப்பு வழங்கினார்.

19–4–75 அன்று சுந்தரர் உலகியல் வாழ்வில் பற்றின்றி வாழ்ந்தவர் என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நிகழ்ந்தது. வழக்குத் தொடுத்தவர் திரு. இரா. செல்வக்கணபதி. எதிர்த்து வழக்காடியவர் திரு கோ. சாரங்கபாணி அவர்கள் திருக்குறளார் திரு. வி முனுசாமி பி ஏ., பி. எல்., அவர்கள் நடுவராக இருந்து "சுந்தரர் பற்றின்றி வாழ்ந்தவர்" என்பதற்குப் பல சான்றுகள் காட்டி தீர்ப்பு வழங்கினார்.

20–4–75 அன்று நிகழ்ந்த கவியரங்கம் திருவானைக்கா திரு. கலைவாணன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. திருவாச

கத்தில் அன்பு, அருள், அறம், அனுபவம் என்ற தலைப்புக்களில் முறையே திரு. தா.ம. வெள்ளைவாரணம், திரு. மா. வே. பசுபதி, திரு. இரா. செல்வக்கணபதி, திரு அ. கலியபெருமாள் எம். ஏ. ஆகியோர் பாடல்கள் இயற்றிவந்து கவியரங்கேறினர்.

21—4—75 அன்று திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் நடைபெற்றன. மாயூரம் திரு. ஆர். இராசசேகரன் அவர்கள் விழாத் தலைமையுரையாற்றி தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் திருமுறைப்பயன் என்ற தலைப்பிலும், திருமதி. ப. நீலா பி. ஏ. அவர்கள் 'மூவர்தமிழ்' என்ற தலைப்பிலும், புலவர், திரு. ந.ரா. முருகவேள் அவர்கள் 'திருமுறை வழிபாடு' என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினார்கள். பின்னர், பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு யானைமேல் திருமுறைகள் ஓப்பனை செய்யப்பெற்று திருவீதியுலா நிகழ்ந்தது. நாள்தோறும் அன்பர்கள் வந்து வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

## ஸ்ரீ சட்டைநாதர் வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் மலைக்கோயிலில் எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ சட்டைநாதருக்கு 2—5—75 அன்று சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. அன்று ஸ்ரீ முத்துச்சட்டைநாதருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அன்று இரவு வெள்ளி மஞ்சத்தில், முத்துச்சட்டைநாதர் புறப்பாடும் சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனத் தமிழ்ப் புலவர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் "ஆபதுத்தாரணர்" என்னும் தலைப்பில் விரிவுரை யாற்றினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு ஸ்ரீ சட்டைநாதர் திருவருட் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

## திருநாவலூர் திருவதிகை வழிபாடு

5-5-75 அன்று திருவாமூரில் ஸ்ரீ அப்பர் வழிபாட்டுக்குப் பின்னர், சைவசமயாசாரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பெருமான் தடுத்தாட்கொண்ட தலமாகிய திருநாவலூரில் ஸ்ரீ சுந்தராம்பிகை உடனாகிய ஸ்ரீ திருநாவலேசுவரர் திருக்கோயிலுக்கும், ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்கு ஏற்பட்ட சூலை நோயைப் போக்கி ஆட்கொண்ட தலமாகிய திருவதிகை வீரட்டானத்தில், ஸ்ரீவீரட்டேசுவரர் திருக்கோயிலுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

## திருவாரூரில் அப்பர் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப் பாங்கின் வண்ணம் இவ்வாண்டு அப்பர் குருபூஜை விழா 3. 4, 5—5—75 ஆகிய மூன்று நாட்களிலும் தருமை ஆதீன அருளாட்சியில் உள்ள சச்சிதானந்தம்பிள்ளை சதாபிஷேக நினைவு ஸ்ரீ அப்பர் குருகுலத்தின் சார்பில் அப்பர் தேவார அருந்தமிழ் மாநாடு, பண்ணாராய்ச்சி மாநாடு முதலியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது.

3-5-75 அன்று கணபதி ஹோமமும், 4-5-75 அன்று நவக்கிரக ஹோமமும்; 5-5-75 அன்று ஸ்ரீ அப்பருக்கு மகந்நியாச ருத்திர ஜப ஹோமம் முதலியனவும் நடைபெற்றன. நாள்தோறும் காலை, மாலை இரு வேளைகளிலும் ஸ்ரீ பசுபதீஸ்வரர் வழிபாடும், அப்பர் வழிபாடும் நடைபெற்றன.

5-5-75 அன்று சிறப்பாக அப்பருக்கு மகந்நியாச ருத்திராபிஷேகமும், அலங்கார தீபாராதனைகளும் நிகழ்ந்தன. 5-5-75 அன்று மாலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாரூருக்கு எழுந்தருளி ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்குப் பொன்னாடை சார்த்தச் செய்து வழிபாடாற்றினர்கள். பின்னர் திருத்துறைப்பூண்டி திரு. ச. ஆபதோத்தாரண தேசிகர் அவர்களுக்குத் "திருமுறைக்கலாநிதி" என்னும் பட்டம் பொறித்த பொற்பதக்கமும், ரூபாய் 501 கொண்ட பணமுடிப்பும் வழங்கி பொன்னாடை போர்த்தி அன்பர்களுக்குப் பிரசாதம் முதலிய வற்றையும் வழங்கி ஆசியருளினர்கள். பின்னர் பண்ணாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்ட ஓதுவாமூர்த்திகளுக்கும், தேவார வகுப்பு மாணவச்சிறுவர்களுக்கும் புத்தாடைகள் வழங்கியருளினர்கள். இரவு ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருவீதிஉலா, விசேஷ நாதஸ்வர இன்னிசையுடனும், பண்ணிசைப் பாராயணத்துடனும் நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் வந்து வழிபட்டுப் பயன்பெற்றனர்.

3 — 5 — 75 அன்று, கருத்தரங்கத்தைத் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் தொடங்கிவைத்தார்கள். பின்னர், தவத்திரு ஊரன் அடிகள், திரு. வ. சா. குருசாமி தேசிகர், திரு. இரா. செல்வக்கணபதி, ஆகியோர் "அப்பர் தேவாரம்" பற்றி விரிவுரையாற்றினர்கள்.

4-5-75 அன்று. காலை சிதம்பரம் திரு ஜி. வாகீசம் பிள்ளை அவர்கள் பண்ணாராய்ச்சி மாநாட்டைத் தொடங்கிவைத்தார்கள்.

திரு ஆபதோத்தாரண தேசிகர் தலைமை உரை யாற்றினார்கள். "காந்தாரப் பண்" பற்றி ஆராய்ச்சி நடந்தது. மாநாட்டில் திருவாளர்கள் ஆர். வேலாயுத ஓதுவார், பி சுவாமிநாதன், மு. கனகசபை பிள்ளை, எஸ். திருஞானசம்பந்தம், எஸ். ஞானப்பிரகாசம், எஸ். கல்யாணசுந்தர தேசிகர், எம். சுப்பிரமணிய முதலியார், டி. எம். விஸ்வலிங்கம், டி. எம். சபாபதி ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை விளக்கினார்கள் அன்றுமாலை நிகழ்ந்த பட்டிமன்றத்தில் கலந்துகொண்டு பாண்டிச்சேரி திருமுடி திரு. என். சேதுராமச் செட்டியார் அவர்கள் தொடக்கவுரை யாற்றினார்கள். அப்பர் தேவாரத்தில் விஞ்சி நிற்பது தமிழ் உணர்வா? சமயவுணர்வா? என்ற பொருளில் பட்டிமன்றம் நிகழ்ந்தது. தமிழ் உணர்வே என்ற தலைப்பில் திரு. இரா. செல்வக்கணபதி, திரு. கா ம. கண்ணப்பன், திருமதி. ப. நீலா ஆகியோரும், சமயவுணர்வே என்றதலைப்பில் திரு. அ. கலியபெருமாள், திரு ஆ ஜகந்நாதன் செல்வி, ச. மீனாட்சிசுந்தரம் ஆகியோரும் வாதிட்டனர் முதுபெரும் புலவர். திரு அ. நடேச முதலியார் அவர்கள் நடுவராக அமர்ந்து"சமயவுணர்வே விஞ்சி நிற்பது"என்று தீர்ப்பளித்தார்.

5—5—75 அன்று காலை பைந்தமிழ்ச் செல்வர் திரு. ச. சிவகுமாரன் எம். ஏ. அவர்களது சிறப்புரைக்குப் பின்னர் தருமபுரம் திரு பி. சுவாமிநாதன் அவர்களால் "அப்பர் அருள்வரலாறு" நாமாவளி பஜனையாக நிகழ்த்தப்பெற்றது. அன்று மாலை டாக்டர் திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை, சிதம்பரம் ஆர் கனக சபைப் பிள்ளை ஆகியோரின் தொடக்கவுரை, சிறப்புரைகளுக்குப் பின்னர், டாக்டர். திரு. சொ. சிங்காரவேலனாரின் தலைமையில் கவியரங்கம் நிகழ்ந்தது. திருவாளர்கள் அ கலியபெருமாள், இரா. செல்வக்கணபதி, பா. வே. பசுபதி, கா ம. கண்ணப்பன் ஆகியோர் கவியரங்கில் கலந்துகொண்டனர். 'திருநாவுக்கரசர்' 'புலவர்' 'வீரர்' 'தொண்டர்' 'பக்தர்' என்ற தலைப்புக்களில் கவிகள் அரங்கேற்றப்பெற்றன. திரு. ஆ செகந்நாதன் எம்.ஏ. அவர்களால் அனுப்பப்பெற்ற "அப்பர் அறநெறியாளர்" என்ற தலைப்பில் அமைந்த கவிதை திரு. வேங்கடரமணி அவர்களால் படிக்கப்பெற்றது. வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்று விழாவை உடனிருந்து நிகழ்த்தினார்கள். திருவாரூர் அப்பர் தொண்டர். கா. மு பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் நன்றி நவின்றார்கள். மாநாட்டுத் தொடக்கத்தில் நாள்தோறும் மங்கல இசையும், பண்ணிசையரங்கும் நிகழ்ந்தன.

---

# எதிர்காலம்

## ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்

ஆசிரியர்,

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( ஸ்ரீஇராக்ஷஸஸூ வைகாசிமீ 1வ முதல் 31வ முடிய )

( 15—5—75 முதல் 14—6—75 முடிய )

| | | | |
|---|---|---|---|
| குரு<br>கிச | | பு<br>சூ கே | சுக்<br>சனி<br>சந் |
| ல | இராசி<br>17வ கடக சுக் | | |
| | | | |
| | ரா | | |

இராட்சஸஸூ சித்திரைமீ 31வபுதவாரம்திருவாதிரை நக்ஷத்திரத்தில் பத்திரை காணம் கூடிய சுபதினத்தில் உலக சுபிட்சத்தை முன்னிட்டு ஸ்ரீலோக ரட்சகரான சூரிய பகவான் உதய முதல் 50 நாழிகை 26 விநாடிக்கு கும்ப லக்கினத்தில் விஷ்ணுபதீ புண்ணிய காலமாக ரிஷப ராசி சங்கிரமணமாகி வைகாசி மாதப் பிரவேசம் செய்கிறார். சங்கிரமணதேவதை சித்திரான்னம் புசித்து ஹாஸ்யமுகத்துடன் வடக்குத் திக்கில் பயணமாகிறார். அதன்பலன் விஞ்ஞான உலகில் புதுமைகள் பல ஏற்படும். ஆசிய நாடுகளில் போர் மூளுவதற்கான சம்பவங்கள் நிகழும். போர்க்கருவி உற்பத்தியில் போட்டியும் சவால்களுமாக இருந்து வரும். நீர் இயந்திர சாதனங்களின் உற்பத்தி பெருகும். விவசாயத்தொழில் அபிவிருத்தியடைந்து பிரஜைகள் உணவு, உடை, இருப்பிட வசதிகளுடன் வாழ்வார்கள். உலகில்உள்ள அறிஞர்கள், சான்றோர்கள், மதகுருமார்கள், தர்மஸ்தாபன கர்த்தாக்கள் ஆகிய புண்ணிய சீலர்களின் தியாகத்தால் உலகில் நலம்பல ஏற்படும். உலகெங்கும் ஏற்பட்டுள்ள தர்மஸ்தாபனங்கள் செயல்படும். திருமடங்கள், ஆசாரிய பீடங்கள் ஆகியவற்றின் அதிபர்களால் நிகழ்த்தப்

பெறும் சிவசமயப் பிரசாரம் உலகெங்கும் பரவி, உலகமக்களனைவருக்கும் தெய்வீகப் பண்பை ஏற்ப்படுத்தும். மக்கள் க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼
( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ – அ. )

மேஷராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். 2, 7 க்குரிய சுக்கிரன் இம்மாதம் 17உ வரையில் சுமார் பலனும் அதன் நற்பலனுமாக இருப்பதால் தனவரவும் தக்க விஷயாதிகளுக்குச்செலவுகளும் ஏற்படும். குடும்ப கௌரவமும் கண்யமும் மேலிடும். புதிய கட்டட நிர்மாணம், கிணறு, தடாகம் ஸ்தாபித்தல் முதலியவற்றில் பணம் முடங்கும். புதன் சூரியன் சேர்க்கை, மற்றைய கிரகங்களின் நிலைமையால் பந்து அம்மான் இவர்கள் விசுவாசமாக இருந்து வருவார்கள். கண் ரோகம் வாயுப்பிடிப்புப் போன்ற உபத்திரவம் வந்து நீங்கும். அரிய காரிய முயற்சி காரணமாக அகால போஜனம் அல்லது வைதீகத்தில் உபவாசம், விரதானுஷ்டானங்கள் தெய்வவழிபாடுகள் முதலிய நெறிமுறைகள் மேலிடும். பூமிகாரகன் செவ்வாய் சனிபார்வையால் ஸ்திர சொத்து விக்கிரயம் அல்லது பரிவர்த்தனை ஏற்படும் கோர்ட் வழக்கில் பாதகாதிகள் நின்று சாதக நிலைமையை உருவாக்கும். சந்திர லக்கினத்துக்கு இருபுறத்திலும் சுபர் பாபர் சேர்ந்திருப்பதால் எந்தக் காரியத்திலும் நெருக்கமான நேரத்தில் நற்பலனைக் கொடுக்கவல்லதாகும். சுப விசேஷங்கள் ஸ்தல யாத்திராதிகள் சம்பவிக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் ஊக்கம் மிகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½
( இ. உ. எ. – ஒ. வ. வி. வு. – வே. வோ. )

ரிஷப ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமாரான பலனைத்தரும். 2 க்குரிய புதன் முதல்வாரம் விஸ்தீர்ண கிரணம் பெற்றும், பின்னர் வக்கிராஸ்தனமாகி பிற்பகுதி பிரகாசம் பெற்றும், 2-ல் இருக்கும் சனி புதனுக்குரிய பலனை அளித்தும் வருவதால் குடும்பத்தில் சுபிட்ச நிலைமையும் மாதமுன் பின் வாரங்களில் அநேக திரவிய செலாவணிகளும் இருந்து வரும். இருணங்கள் தீரும். புத்திரர்களின் தொழில் உத்தியோகம் சிறப்புறும். இம்மாதம் 17உ க்கு மேல் சகோதரம் களத்திரவகை மேன்மையும் போக்கிய வஸ்துகளின் லாபமும் ஏற்படும். மித்திரர்களின் வருகையும் விருந்து உபசரணைகளும் நிகழும். செவ்வாய் லாபஸ்தானத்தில் குரு சம்பந்தம் பெற்றதால் களத்திர வழியில் ஆதாயமும் சகோதரர்களின் உதவியும் இருந்து வரும்.

சனிபார்வையால் சுமார் பலனை இருக்கும். மனைவி சகோதரர் களுக்கு உடல் நலம் குறையினும் உடன் குணமாகும். கர்ம தர்மாதிபதி நீசாங்கம் அடைந்தாலும் மற்றக் கிரகங்களின் சகாயம் இருப்பதால் பொருளாதாரத்திலும் செய்தொழில் உத்தி யோகத்திலும் பிறர் ஏசுதல் குறை கூறுதல் ஏற்படினும் இராச தந்திர முன் யோசனைகளினால் சமாளிக்கும் நிலைமையாகும்.

### 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ )

மிதுன ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். இம்மாதம் முதற்பகுதியில் தனவசதி சுமா ராகவும் 17௳ க்குமேல் கடகராசியை அடையும் சுக்கிரன் சுபத்துவம் பெறுவதால் தனவசதி சிறப்பாகவும் வீட்டில் இலட்சுமிகரமான நிலைமையும் ஏற்படும். சூரியன், புதன் 12-ல் சேர்ந்ததால் பந்து அம்மான் முதலியோரால் அதிக பொருட் செலவு ஏற்படும். ஆரம்பித்த வியாபாராதி தொழில்களில் முற்பகுதியில் நஷ்ட பலனையும் பிற்பகுதியில் முன்னேற்ற நிலைமையையும் ஏற்படுத்தும். செவ்வாய் குரு சனி பார்வையால் மனைவி, மைந்தர், சகோதரர்கள் சம்பந்தமான அல்லல்களும் பூமி, இயந்திரவகையில் குழப்ப நிலைமையுமாக இருந்துவரும். இம்மாதம் பிற்பகுதியில் அவ்வித நிலைமை நீங்கி நிம்மதியளிக்கும். சந்திர லக்கினத்தில் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் இரத்தக் கொதிப்பு மயக்கம் போன்ற விபத்து ஏற்பட்டு ஜீவன் தப்பும். செவ்வாய்க்கு லாபாதி பத்தியமும் இருப்பதால் பூமி, செந்நெல் அபிவிருத்தி முயற்சிகளில் சிரமத்தின்பேரில் பலிதமும் கோர்ட் வியாஜ்யங்களில் வெற்றி மார்க்கங்களையும் ஏற்படுத்தும். பிரபலஸ்தர் மேலோர் தக்கசமயத்தில் ஆதரவளிப்பார்கள். செய் தொழில் அல்லது உத்தியோகம் சிறு வாதத்துடன் நடைபெறும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

( ஹி. – ஹு. ஹே ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபபலனைத் தரும். 2 க்குரிய சூரியன் கோசார நற்பல ஸ்தானத்தில் புதனுடன் கூடியதால் பணச்செலாவணி மிகுந்துகாணும். கடித மூலமான லேவாதேவிகள் உடனுக்குடன் திருப்தியளிப்பதாக இருக்கும், நவீன வஸ்துக்களைப் பயன்படுத்துதலும், வீடு அலங்காரமும், நூதனமான வைபவ சம்பவங்களும் ஏற்படும். பத்திரலிகிதங்கள் அரசாங்க சட்டதிட்டங்களுக்கு உகந்த வகையில் ஆதாயமளிப் பதாக இருக்கும். 4 க்குரிய சுக்கிரன் இம்மாதம் 17௳ க்குமேல் சுபத்துவம் அடைவதால் வாகனம் கட்டிடம் இவற்றின் ஆக்கம்

ஏற்படும். 5 க்குரிய செவ்வாய் குரு சம்பந்தம் அடைந்து சனி பார்வையும் இருப்பதால் புத்திரர், பிதா, சகோதரர் இவர்களின் மனவருத்த சம்பவம்வந்து உடன் திருப்தியளிக்கும் வகையில் சமாளித்தலாகும். இம்மாதத்தில் சனி செவ்வாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதால் விவசாய வேலைகளில் ஸ்தம்பன நிலைமை ஏற்பட்டுப் பின்னர் விலகும். 12-ல் உள்ள சனி நீச அம்ஸம் அடைந்ததால் சிரமம் தோன்றுமல் கிரியைகள் பெருமையாக நடைபெறும். செய்தொழில் அல்லது உத்தியோகம் பெருமதிப்புடன் விளங்கும்.

## 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மெ. – மோ. டா. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர மான பலனைத்தரும். 2 க்குரிய புதன் சூரியனுடன் சேர்ந்து 10-ல் இருப்பதால் தனவசதி தாராளமாய் இருந்துவரும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான நிலைமையாக இருக்கும். 3 க்குரிய சுக்கிரன் இம் மாதம் 17உ சுபபலமடைவதால் சகோதரர் குடும்பத்தில் சிரமம் குறையும் 4 9 க்குரிய செவ்வாயும், 6, 7 க்குரிய சனியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதால் மாதாவுக்கு ஓர் கண்ட சம்ப வமும், பூமி, மனை முதலிய ஸ்திரப் பொருள்களில் சிறிது விக் கிரயமும் ஏற்படும். பிதாவகைச் சொத்தில் ஓர் சச்சரவுப் பாகப் பிரிவினையும் ஏற்படச்செய்யும். மற்றைய நற்பல கிரகங்களின் சஞ்சாரத்தால் மாதா, பிதா இவர்களுக்கு தன் கடமை நிறை வேற்றுவதற்கான ஆற்றலையும் நோய்களைத் தக்க வைத்தியர் களால் குணமாக்குவதற்கான மார்க்கங்களையும் ஏற்படுத்தும். புத்திரர்களின் கோபம் மனக்கஷ்டத்தை ஏற்படுத்துவதாயினும் அனுசரணைப்போக்கு இருந்துவரும். இராசாங்க கௌரவம் ஏற்படும். பெரியோர், சான்றோர்களிடம் ஆசி பெறுவதும் நல் அறிவுரைகளை ஏற்பதும் ஆகும். செய்தொழில் அல்லது உத்தியோகம் கண்யமுடன் செயல்படும்.

## 6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமாரான பலனைத் தரும். 2 க்குரிய சுக்கிரன் இம்மாதம் 17உ க்கு மேல் சந்திரலக்கினத்துக்கு 11-ல் வருவதால் அக்காலம் தன வசதியில் சிறப்பு ஏற்படும். சமயோசிதமாகப் பலவிதத்தில் ஆதாயங்கள் வந்துசேரும். குடும்பநலம் பெருகும். 3, 8 க்குரிய செவ்வாயும் 5, 6 க்குரிய சனியும் ஒருவரை ஒருவர் பார்ப்பதால்

சகோதரர் மனஸ்தாபம் மித்திரர்களும் சத்துருவாகுதல் போன்ற சூழ்நிலை ஏற்படினும் இம்மாத பிற்பகுதியில் அவை நீங்கப். புத்திரர் புத்திரிகளுக்குச் சரீர நலிவு ஏற்பட்டு குணமாகும். கணவன் மனைவிக்குள் சச்சரவும் மனக்கஷ்டமும் ஏற்படினும் இம்மாதம் 17உ க்குப்பிறகு படிப்படியாக விலகுவதாகும். தர்ம கர்மாதிபதிகளின் சஞ்சாரத்தால் குல சம்பிரதாய விசேஷங்கள் சிறப்புடன் நடைபெறும். புத்திரர்களின் கல்வி, தொழில்துறை முன்னேற்றம் ஒரு விதத்தில் மகிழ்ச்சியாக இருந்துவரும். சிறிது குழப்பத்திற்கிடையே ஓர் சுபமங்கள காரியத்தை நடத்தி வைக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் எதிர்ப்பான சம்பவங்களைச் சமாளிக்கும் ஆற்றல் ஏற்படும். ஓர் ஸ்தானமாற்றமும் சமயோசித நடைமுறையால் தொழிலில் நன்மதிப்பும் ஏற்படும்.

## 7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமாரான பலனைத்தரும். 2க்குரிய செவ்வாய் நற்பலஸ்தானத்தில் இருப்பதால் தனவசதி கண்யத்துடன் இருந்துவரும். குடும்பக் கஷ்டங்கள் விலகும். பூமி, சிவந்த பொருள் பிராப்தி ஏற்படும். வாக்கு கௌரவம் உண்டாகும். 3 க்குரிய குரு ஆட்சிப்பெற்று செவ்வாய் சனி ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வதால் சகோதரம் களத்திரம் இவர்களுக்கு உடல் நலம் பாதிப்பு ஏற்பட்டுக் குணமாகும். பெற்றோர் புத்திரர்களின் மனஸ்தாபமும் பாகப்பிரிவினையில் வாதங்களும் ஏற்பட்டு சமரசமாகும். கணவன் மனைவிக்குள் பரஸ்பரம் ஒற்றுமை இருந்துவரும். புதன் சூரியன் நிலையால் வித்துவத்தும், வியாபாராதி தொழில்களில் சிறப்பை உண்டாக்கும். அரசாங்க ஈடுபாடுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட மார்க்கம் உண்டாகும். கோர்ட் வழக்குகளில் ஆதார நிருபணங்கள் ஏற்பட்டு இம்மாதம் பிற்பகுதியில் வெற்றியை உண்டாக்கும். பிதா பாக்கியத்தில் ஓர் களங்க நிலைமை ஏற்பட்டு தெளியும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சில இடையூறுகள் ஏற்பட்டு சமாளிக்கும் நிலைமையாகும்.

## 8. விருச்சிகம் ¼ – அனுஷம் – கேட்டை.

( தோ. – ந. நி. நு. நெ. - நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி ). பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைக் கொடுக்கும். 2 க்குரிய குரு சுப பலனாக இருப்பதால் பணவசதி திருப்திகரமாக இருந்துவரும். குடும்பநலம் பெருகும். 3, 4 க்குரிய சனி நிலைமையால் சகோதரர் விரோதம், உடல்நலப் பாதிப்பு ஏற்படினும் இம்மாதம் 17 உக்குமேல் அவை நீங்கும்.

மாதாவுக்கு இரத்தாதிக்கம் ஏற்பட்டு குணமாகும். இயந்திர வாகனத்தில் இம்மாதப் பிற்பகுதி பயன்தரும் காலமாகும். புதன் சூரியன் நிலைமையால் வித்தியா வியாபாராதிகளில் திருப்தியற்ற நிலைமையும் அதிக முயற்சியுமாக இருந்துவரும். குஜன், சனி ஒருவரை ஒருவர் பார்ப்பதால் ஓர் விபத்தும், சில விஷயங்களில் சர்ச்சையும் வந்து நீங்கச்செய்யும். பந்து அம்மான்கள் மிச்சிர மாக நடந்துகொள்வார்கள். புத்திரர்களின் கல்வி, தொழில் துறை முன்னேற்றமானதாக விளங்கும். இம்மாதம் 17 உ கடக ராசியை அடையும் சுக்கிரன் நற்பலனாகவிளங்குவதால் கணவன் மனைவிக்குள் பரஸ்பரம் ஒற்றுமையும் சந்துஷ்டியும் நிலவும். கிரியைஸ்தானாதிபதி கிரக சேர்க்கையால் அரியகாரிய முயற்சியில் சிரமம்போல் தோன்றி நற்பலனளிக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சமயோசித நடைமுறையாக இருந்துவரும்,

## 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

( யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கு . 2, 3 க்குரிய சனி பலவீனமாகி செவ்வாய் பார்ப்பதால் சகோதரர் புத்திரர்களால் அதிக செலவை உண்டு பண்ணும். சகோதரர் குடும்பத்தில் குழப்பநிலைமையாலும் இம்மாதம் 17 உ கடக ராசியை அடையும் சுக்கிரன் நிம்மதி யளித்து சுக சௌக்கியத்தைக் கொடுக்கும். வீடு வாகனத்தில் நல்ல வசதியை உண்டுபண்ணும். சூரியன், புதன் பலம் பெற் றுள்ளதால் வித்தியாவியாபாராதிகளில் முன்னேற்றம் ஏற்படும். பத்திரம், லிகிதம், அரசாங்க அனுகூலாதிகளில் ஓரளவு திருப்தி யளிப்பதாக இருந்துவரும். சனி, செவ்வாய் நிலைமையால் கணவன் மனைவிக்குள் ஓர் சச்சரவு ஏற்பட்டு நீங்கும். புதன் நிலைமையால் மனைவிமூலியம் திரவிய பிராப்திக்கு நல்ல மார்க் கத்தை உண்டுபண்ணும். பிதுர் சொத்து தகராறில் சகாய போக்கு இருந்துவரும். இம்மாதப் பிற்பகுதியில் கால்நடை வாகன விருத்தியும், விவசாய முயற்சியில் முன்னேற்றமும், குடும் பத்தில் இருந்த கஷ்ட நிலைமை நீங்குவதும் ஆகும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் சுறுசுறுப்பும் பெருமதிப்பும் இருந்துவரும்.

## 10. மகரம் - உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - க. கீ. )

மகரராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர மான பலனைத்தரும். 2 க்குரிய சனி சுபபலனாக இருப்பதால்

தனவசதி திருப்திகரமாக இருந்துவரும். குடும்ப நலம் சிறப்புறும். செவ்வாய், சனி பலம் பெற்று ஒருவரை ஒருவர் பார்ப்பதால் திட தைரியம் மிகும். சத்துரு ஜெயம் ஏற்படும். பூமி சம்பந்தமாகவும் யந்திரசாதனங்களிலும் அதிக முயற்சியால் முன்னேற்றமும், ஆதாயமும் ஏற்படும். அரசாங்கமூல இருணங்கள் கொஞ்சம் தீரும். சூரியன், புதன் சேர்க்கையால் தந்தை, தாய்மாமன் விரோதப் போக்கும், அரிஷ்டமும், வித்தியா தொழில் துறையில் உற்சாகமின்மையும், அதிருப்தியும் ஏற்படும். வயிற்றுப்போக்கு அல்லது புத்திரர்களின் உடல் நலம் பாதிப்பு ஏற்பட்டு குணமாகும். விவகார வழக்குகளில் சாதக நிலைமை ஏற்படும். கணவன் மனைவி வாழ்க்கையில் சந்துஷ்டியின்மையும் சாதாரண நிலைமையுமாக இருந்துவரும் தர்மகர்மாதிபதிகளின் நிலையால் தெய்வ சிந்தனையும், புத்திரர்களின் நற்காரிய முயற்சியும் இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சாதாரண நிலைமையாக இருந்துவரும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி–¾

( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு, – ஸே. ஸோ. தா )

கும்பராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிரமான பலனைத்தரும். 2 க்குரிய குரு அசுபர்சம்பந்தம் வீட்சணம் அடைந்ததால் குடும்பத்தில் பண நெருக்கடியாக இருக்கும். குடும்ப கலவரத்தில் ஒருபுறம் மனம் வெதும்புவதாயினும் மனோ தைரியமாகச் செயல்படுவதும், குடும்பத்துக்கு இழுக்கு வராதவாறு சமாளித்துக்கொள்வதுமாகும். சனியைச் செவ்வாய் பார்ப்பதால் இரத்தக்கொதிப்பு, காயம்படுதல் முதலிய உபத்திரவம் வந்து சொற்ப செலவுடன் நீங்கச்செய்யும். 4 ஆம் இடத்தில் உள்ள கிரக நிலைமையால் வாகனத்தில் ஓர் நஷ்டமும், இருப்பிடத்தில் சிரமமும் காட்டும். புத்திரர்களின் போக்கு. பிடிவாத குணம், மனத்தாங்கலாக இருக்கும். கணவன் மனைவியரிடையே சில சமயங்களில் வெறுப்புணர்வு ஏற்படுதலும் உடன் சமாதான போக்குமாக இருக்கும். இம்மாதப் பிற்பகுதியில் நிம்மதியளிக்கும். உபவருமான வழிதுறைகளில் திருப்தியற்ற நிலைமையாக இருக்கும் நண்பர்கள் முக்கியஸ்தர்களின் அதிருப்தியும் உடன் நிருபணார்த்த நல் அபிப்பிராயமும் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கடமைப்பணி நடந்துவரும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

( தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி )

மீனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். 2 க்குரிய செவ்வாய் சந்திரலக்கினத்தில் சுபர்

சேர்க்கைபெற்றும், லாப விரயாதிபதியால் பார்க்கப்பெற்றும் இருப்பதால் பணவசதி பெருமை பொருந்தியதாக இருக்கும். வரவும் செலவும் சமமாக இருந்துவரும். 3, 4 க்குரியவர்கள் பரிவர்த்தனையுடன் 3 ல் கிரக சேர்க்கையும் இருப்பதால் சகோதரர் குடும்பம் சிறந்து விளங்கும். சிவந்த கற்கள் பதித்த ஆபரண பிராப்தி ஏற்படும். சாஸ்திரோக்தமான சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்தலாகும் ரோகபயம் நீங்கும். பூமி, வீடு, வாகனம், இயந்திர சாதனங்களில் கடன் சுமையாக இருந்துவரும். இம்மாதம் பிற்பகுதியில் புத்திரர் புத்திரிகளின் சார்பில் சுபங்கள் ஏற்படும். கால்நடை வாங்குதலில் விவசாய முயற்சியில் சிரமத்துடன் சுவல்ப பலனாக இருந்துவரும். பந்து அம்மான் இவர்களின் சத்துருத்துவமும் மனத்தாங்கலும் ஏற்பட்டு விலகும். தர்மகர்மாதிபதிகளின் நிலைமையால் பெருமைபலன் மிகுதியும் இடையில் புத்திரர் சகோதரர்களால் மனக்கஷ்டமும் ஏற்பட்டு நீங்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் உழைப்பு அதிகமாயினும் பெருமைப் பலனேமிகும்.

---

## சைவாநுட்டான விதியும் அநுட்டான அகவலும்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநக்ஷத்திர விழா மலர் வெளியீடு; கிரௌன் 1 x 8 பக்கங்கள் 38. விலை பைசா 0—45. கிடைக்குமிடம் :— ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமையாதீனம், மாயூரம் 609001.

சைவமெய்யன்பர்கள் தவறாது உரிய காலத்தில் சமய தீக்ஷை பெற்று சைவாநுட்டானம் செய்தற்குக் கடமைப்பட்டவர்கள். திருநீறு அணிதற்கும் இறைவனுடைய திருவைந்தெழுத்து ஓதுதற்கும் உரிமையளிக்கும் சமய தீக்ஷை பெறுதவர் சைவராகார். ஆசாரியனை அடுத்து சிவதீக்ஷை பெற்று அனுட்டானம் செய்ய விரும்பும் அன்பர்களுக்கு உதவியாக விளங்கும் இந்நூல் சமய உலகில் புகழ் பெற்றுத் திகழ்வது

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இந்நூலை நான்காவது பதிப்பாகத் தமது ஜன்மநக்ஷத்திர நாளில் வெளியிட்டுச் சமய உலகிற்கு வழங்குகிறார்கள். இந்நூலில் தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகளின் ஞானசாரியராகிய கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் அருளிய சைவானுட்டான அகவலும் சேர்க்கப் பெற்றுள்ளது. சைவப் பெருமக்கள் இந்நூலைப் பெற்றுச் சைவானுட்டானம் மேற்கொண்டு இறைவன் திருவருள் பெற்று உய்வார்களாக.